வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 06
18.01.2025 சனிக்கிழமை
இதழ் : 18
பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# ஈழத்தமிழர்கள் இறைமையை நிலைநாட்ட சமஷ்டியே தேவை!

## ஐரோப்பிய ஒன்றியத்தினரிடம் தமிழரசுக் கட்சி திட்டவட்டம்



கொழும்பு, ஜனவரி 18

ஈழத்தமிழர்களின் அரசியல் உரித்துகளை நிலைநாட்ட, சமஷ்டி முறையிலான அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வொன்றே காலத் தேவையானது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ஐரோப்பிய ஒன்றியத்தினரிடம் வலியுறுத்தியுள்ளர்.

ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைமை கண்காணிப்பாளர் நாச்சோ சான்செஸ் அமோர், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் கார்மன் மொறேனோ

11



## தேசியப் பொங்கல் விழா இன்று தெல்லிப்பழையில்!

யாழ்ப்பாணம், ஜன. 18

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயிலில் இன்று நடைபெறவுள்ள தேசிய பொங்கல் விழாவில் கலந்து கொள்வதற்காக கொழும்பிலிருத்து கலை கலாசார பண்பாடுகளை பிரதிநிதித்துவம் செய்யும் விசேட குழுவொன்று யாழ்ப்பாணம் வந்தடைந்துள்ளது.

நேற்று மதியம் கொழும்பிலிருந்து கடுகதி ரயிலில் யாழ்ப்பாணம் வந்தடைந்த குறித்த பிரதிநிதிகளை யாழ். ரயில் நிலையத்தில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட

11

## பொறுப்புக் கூறல் அவசியம் என்பதை ஜனாதிபதி அநுரவும் ஆதரிக்கவில்லை

### சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம்

கொழும்பு, ஜன. 18

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திஸாநாயக்கவும் போர்க் காலத்தில் இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறப்படு தல் அவசியம் என்பதை ஆதரிக்க வில்லை என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தனது வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது

சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட

11

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 18

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வி.கே சிவஞானம் தலைமையில் இந்த கூட்டம் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

இதன்போது, கட்சிக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கு, கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் மீது எடுக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை, இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாடு, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (அ)

## ரணில் ஆகியுள்ளார் அநுர!

### ஹர்ஷன ராஜகருணா கூறுகிறார்

கொழும்பு, ஜன. 18

நாட்டு மக்கள் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை ஆட்சிக்கு கொண்டுவரவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அநுர தற்போது விக்கிரமசிங்க ஆகியுள்ளார். அநுரகுமார திஸாநாயக்க அல்லர். அநுரகுமார விக்கிரமசிங்க ஆகியுள்ளார். அத்தனைய விடயங்களே தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதில் பல நலன் பயக்கும் விடயங்களும்

11



## யாழ். பல்கலைக்கழகத்தில் பொங்குதமிழ் எழுச்சிநாள்!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜன. 18

பொங்குதமிழ் பிரகடனத்தின் 24 ஆவது ஆண்டு எழுச்சிநாள் நிகழ்வுகள் நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

11

## சிறையில் அடைத்து எங்களின் பயணத்தைத் தடுக்க முடியாது!

### நாமல் ராஜபக்ஷ அரசுக்கு சவால்

கொழும்பு, ஜன. 18

"போலிக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, சிறையில் அடைப்பதன்மூலம் எமது பயணத்தை தடுக்க முடியாது. மக்களுக்கான எமது வேலைத்திட்டம் தொடரும்." என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ சூளுரைத்துள்ளார்.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் முறைப்பாடுகளை முன்வைப்பதற்கான அலுவலகத்தை மொட்டு கட்சி தலைமையகத்தில் திறந்துவைத்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட

11

## மின்சாரக் கட்டணம் 20 வீதத்தால் குறையும்

கொழும்பு, ஜன. 18

மின்சாரக் கட்டணத்தை 20 வீதத்தால் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தொடர்பாடல் பிரிவுப் பணிப்பாளர் ஜெயநாத் ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

## கோட்டாபய வாக்குமூலம்!

கொழும்பு, ஜன. 18

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஒன்றரை மணி நேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கதிர்காமம் பகுதியில் உள்ள காணி ஒன்று தொடர்பில் வாக்குமூலமொன்றை வழங்குவதற்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அழைப்பு விடுத்திருந்த நிலையில் முன் னாள் ஜனாதிபதி நேற்றுக் காலை

11

## சீனப் பயணம் குறித்து மக்களுக்கு ஜனாதிபதி தெளிவுபடுத்தவேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஜன. 18

ஜனாதிபதியின் சீனப் பயணத்தின்போது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் மற்றும் எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மன்னார் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பொலிஸாரே பொறுப்பு கூறவேண்டும்

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு



மன்னார், ஜன. 18

மன்னார் நீதிமன்றத்துக்கு முன்னால் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு பொலிஸார் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அறிக்கை ஒன்றை விடுத்துள்ள அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

மன்னார் நீதிமன்றத்திற்கு முன் நடைபெற்ற துப்பாக்கி பிரயோகம் உண்மையிலேயே கண்டிக்கத்தக்க ஒரு விடயம் என்பதுடன், காட்டு மிராண்டித்தனமான ஒரு விடயமாகும்.

இந்த மிலேச்சத்தனமான செயலுக்கு மன்னாரில் உள்ள பொலிஸார் முழுப்பொறுப்பையும் எடுக்கவேண்டும்.

நொச்சிகுளம் மக்கள் தொடர்ந்து பழிவாங்கப்படுகிறார்கள். இன்றும் தொடர்ச்சியாக நொச்சிகுளம் கிராமத்தின் மக்கள் படிப்படியாகப் படுகொலை செய்யப்படுகின்ற சூழல் காணப்படுகிறது.

இந்த விடயத்தை கடந்த அரசாங்கத்தில் மக்கள் பாதுகாப்பு தொடர்பாடல் அமைச்சரோடு நான் நேரடியாக பேசியிருந்தேன். காரணம் துப்பாக்கி பாவிக்கப்பட்டுள்ளது. முன்னர் ஏ.கே 47 பாவிக்கப்பட்டுள்ளது .

இப்பொழுது எந்த வகையான துப்பாக்கி பாவிக்கப்பட்டுள்ளது என்பது தெரியவில்லை. இந்த துப்பாக்கிப் பிரயோகம் நொச்சிகுளம் மக்களை பார்த்து தான் பிரயோகிக்கப்படுகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

மன்னார் பொலிஸாரின் மெத்தனப் போக்கும் இதில் அடங்கியிருக்கிறது. அந்த கிராமத்து மக்கள் அச்சத்தோடு வாழும் சூழலில் மீண்டும் மன்னார் நீதிமன்றத்துக்கு முன் இந்த படுகொலைகள் நடைபெற்றிருக்கிறன. ஆகவே இது கண்டிக்கத்தக்கது.

இவ்விடயம் சம்பந்தமாக ஜனாதிபதியின் கவனத்திற்கும், பாராளுமன்றத்தின் கவனத்திற்கும் முக்கியமான விடயமாக கொண்டு வரவுள்ளேன். ஏனென்றால் இது தொடர்ச்சியாக நடைபெறுகின்ற விடயமாக இருக்கிறது.

முப்படைகள் அங்கே பாதுகாப்பு நடவடிக்கையில் இருக்கும் போது இவ்வாறான விடயங்கள் நடைபெறுவது கேள்விக்குறியாகவே இருக்கிறது. அந்த வகையில் இவ்வாறான சம்பவங்கள் நிறுத்தப்படவேண்டிய விடயங்களாகும்.

சம்மந்தப்பட்டவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்ட வேண்டும். இதற்கான குழு அடங்கிய புலனாய்வுத் துறை நடவடிக்கைகளை பொலிஸார் உடனடியாக ஆரம்பித்து செயலில் இறங்கவேண்டும் - என்றுள்ளது. (அ)

# போதை மாத்திரைகளுடன் இரு சந்தேக நபர்கள் கைது

கொழும்பு, ஜன. 18

புத்தளம் - கற்பிட்டி நகரில் விற்பனைக்கு தயாராக வைத்திருந்த 800 போதை மாத்திரைகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினரால் சந்தேகத்தின் பேரில் முச்சக்கர வண்டியை ஒன்றைச் சோதனையிட்ட போதே குறித்த மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

அதன்படி, இந்த சட்டவிரோதச் செயலுடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்கள், போதைமாத்திரைகள் முச்சக்கர வண்டியுடன் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 33 மற்றும் 49 வயதுடைய கல்பிட்டியின் புதுக்குடியிருப்பு மற்றும் எத்தலை பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இவர்கள் கல்பிட்டி பொலிஸாரிடம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டனர். (அ)



# சுண்டிக்குளம் கடற்கரை பகுதியில் கரையொதுங்கிய மர்மப்பொருள்!

கிளிநொச்சி, ஜன. 18

கிளிநொச்சி சுண்டிக்குளம் கடற்கரைப் பகுதியில் இனம் தெரியாத மர்மப் பொருள் ஒன்று கரையொதுங்கிய நிலையில் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கரையொதுங்கிய உருளை வடிவிலான மர்மப் பொருளில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் எழுத்துக்கள் தெளிவற்ற நிலையில் காணப்படுகின்றன.

இதனடிப்படையில் குறித்த மர்ம பொருளானது சீரற்ற காலநிலையால் இலங்கையின் வேறு பகுதிகளில் இருந்து வந்து இங்கு கரையொதுங்கியிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக் காலமாக வடக்கு கடற்பரப்பில் பல்வேறு விதமான மர்ம பொருட்கள் கரையொதுங்கி வருவது மக்கள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு கரையொதுங்கிய உருளை வடிவிலான மர்மப் பொருளை கடற்படையினர் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மனுஷவின் சகோதரருக்கு பிணை!

கொழும்பு, ஜன. 18

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரர் திசர இரோஷன நாணயக்காரவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

அவர் நேற்று கம்பஹா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அவர் தலா 1 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள நான்கு சரீரப் பிணைகளில் அவர் விடுவிக்கப்பட்டார்.

நெதர்லாந்தில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி 3 மில்லியன் ரூபாய் மோசடி செய்த தற்காக திசர இரோஷன நாணயக்கார டிசெம்பர் 28ஆம் திகதி கைது செய்யப்பட்டார். (அ)

# சட்டவிரோத குடியேறிகள் பிரவேசிப்பதை தடுக்க தீவிர கண்காணிப்பில் கடற்படை!

கொழும்பு, ஜன. 18

சட்டவிரோத குடியேறிகள் நாட்டிற்குள் பிரவேசிப்பதை தடுக்கும் வகையில் இலங்கை கடற்படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆயிரக்கணக்கான சட்டவிரோத குடியேறிகளை இலங்கைக்கு நகர்த்துவதற்கு சதி முயற்சிகள் தென்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இந்த விடயம் குறித்து அண்மையில் பாராளுமன்றிலும் சுட்டிக்காட்டியிருந்தார்.

அண்மையில் 100 இற்கும் மேற்பட்ட ரோஹிங்கியா புகலிடக் கோரிக்கையாளர்கள் இலங்கைக்குள் பிரவேசித்திருந்தனர்.

எதிர்வரும் நாட்களில் ஆயிரக்கணக்கான சட்டவிரோத குடியேறிகளை நாட்டிற்குள் கடத்தும் திட்டம் இருப்பதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளாக அவர் குறிப்பிட்டார்.

சட்டவிரோதமாக குடியேறிகளை தடுக்க கடற்படை விழிப்புடன் உள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

நாமலுக்கு எதிரான வழக்கு:

# ஆவணங்களைப் பரிசோதிக்க பொலிஸாருக்கு மன்று அனுமதி

கொழும்பு, ஜன. 18

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கொன்றின் ஆவணங்களைப் பரிசோதிக்க குற்றப் புலனாய்வுத் திணைக்கள பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை, கிரிஸ் ட்ரான்ஸ்வர்ட் சதுக்கத்தில் 4.3 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு வழங்குவதில் 70 மில்லியன் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாக நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய வர்த்தக, வாணிப அமைச்சர் வசந்த சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் இதற்கான முறைப்பாட்டை மேற்கொண்டிருந்தார்.

நாமல் ராஜபக்ஷவுக்கு இந்த வழக்கில் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில், வழக்கின் விசாரணைகள் நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது வழக்கின் ஆவணங்கள் நகல் பிரதிகளா? அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளா என்பதை பரிசோதிக்க அனுமதிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பொலிஸார் நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

குறித்த வேண்டுகோளுக்கு அனுமதியளித்த கோட்டை நீதிமன்ற நீதவான் லங்கா நிலுபுலி, நீதிமன்ற பதிவாளரிடம் உள்ள ஆவணங்களைப் பார்வையிட குற்றப் புலனாய்வுத் திணைக்கள பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளார். (அ)

# வசதி வாய்ப்புகள் குறைந்த நிலையிலும் தேசிய ரீதியில் பல சாதனைகள் படைப்பு

## யாழ். மாவட்ட அரச அதிபர் புகழாரம்

யாழ்ப்பாணம்,ஜன.18

வசதி வாய்ப்புகள் குறைந்த நிலையிலும் எமது வீர வீராங்கனைகள் தேசிய ரீதியில் சாதித்துள்ளனர் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழா - பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில்,

அவர் மேலும் கூறுகையில், பிரதேச செயலகங்களுக்கு இடையிலான போட்டியில் 35 வகையான போட்டிகள் நடைபெற்றமை சிறப்பான விடயம். முதற்தடவையாக நீச்சல் போட்டிக்கான தெரிவும் நடைபெற்றுள்ளது. இப் போட்டிகளில் யாழ். மாவட்டத்திலிருந்து பங்குபற்றிய 200 வரையான வீர வீராங்கனைகள் பரிசில்கள் சான்றுதழ்கள் பெறுவது பாராட்டத்தக்கது.

மேலும், தேசிய ரீதியில் எமது வீர வீராங்கனைகள் சாதித்து வருகின்றனர். அந்த வகையில், உதைபந்தாட்டம் ஆண்கள் அணி இம்முறையுடன் தொடர்ந்தும் மூன்றாவது ஆண்டாக தேசிய ரீதியில் சம்பியன் பட்டம் வென்றமை அதிசிறப்பான விடயம். கூடைப்பந்தாட்டம் (ஆண்கள் மற்றும் பெண்கள்) இரு பிரிவு களிலும் இரண்டாம் இடத் தையும், மெய்வல்லுநர் போட்டிகளில் கோலுன்றிப் பாய்தல் ஆண்கள் பிரிவு போட்டியில் ஏ. புவிதரன் மற்றும் பெண்கள் பிரிவில் என். டக்சிதா ஆகியோர் தேசிய போட்டிச் சாதனையுடன் தங்கப்பதக்கமும், குண்டெறிதல் மற்றும் தட்டெறிதல் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் எஸ். மிதுன்ராஜ் இரட்டை வெள்ளிப் பதக்கங்களையும் தேசிய ரீதியாக வென்றுள்ளமையும், பளுதூக்கல் பெண்கள் பிரிவில் ஒரு தங்கம் ஒரு வெள்ளி உட்பட இரண்டு பதக்கங்கள், குத்துச்சண்டை ஆண்கள் பிரிவில் இரண்டு வெண்கலப் பதக்கங்கள் மற்றும் பெண்கள் பிரிவில் ஒரு வெள்ளிப் பதக்கமும் தேசிய ரீதியில் பெற்றமையை குறிப்பிட்ட அரசாங்க அதிபர், வசதி வாய்ப்புகள் குறைந்த நிலையிலும் கல்வி மற்றும் இதர செயல்பாடுகளுக்கு மத்தியிலும் ஆர்வத்தோடு பங்குபற்றும் சகல வீர வீராங்கனைகளின் எதிர்காலம் ஒளிமயமாக சிறக்க தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
18.01.2025 சனிக்கிழமை
பிலவ வருடம், தை 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## என்ன தீர்வு - எவ்வாறு அடைவது?

இலங்கை தமிழ் அரசுக் கட்சி எதிர்வரும் நாட்களில் கூடி அரசியல் தீர்வு தொடர்பில் ஆராயவுள்ளதாக எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். தீர்வு பற்றி பேசுவதற்கு இனியும் தேவையிருக்கின்றதா? இலங்கை தமிழ் அரசு கட்சி உருவாக்கப்பட்டு 75 ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்தக் காலத்தில் ஏராளமான விடயங்கள் நடந்து முடிந்துவிட்டன - ஏராளம் உயிர்களும் உடமைகளும் இழக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும், தமிழர் முன்னர் இருந்த நிலையை விடவும் மோசமான நிலையை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றனர்.

வடக்கு - கிழக்கு தமிழரின் தாயகம் - அதற்கு சுயநிர்ணய உரிமையுண்டு - அதனை அடைவதற்கு சர்வதேசம் உதவ வேண்டும் - இப்படியான கோரிக்கைகளுடன்தான் கடந்த பதினைந்து வருடங்கள் கடந்திருக்கின்றன. ஆனால், ஆகக் குறைந்தது அரசியல் அமைப்பிலுள்ள விடயங்களைக் கூட அமுல்படுத்தும் விடயத்தில் தமிழ் கட்சிகளால் முன்னேற்றத்தைக் காண்பிக்க முடியவில்லை. இந்த நிலையில் தீர்வு தொடர்பில் இனியும் விவாதிக்க, தீர்மானம் எடுக்க என்ன இருக்கின்றது? அப்படியே தீர்மானம் எடுத்தாலும் கூட, முன்வைக்கும் அந்தத் தீர்வு தொடர்பில் யாருடன் பேசுவது? அரசாங்கம் உடன்படாவிட்டால் என்ன செய்வது? எந்த வெளித்தரப்பு தமிழர்களோடு நிற்கின்றது?

நாங்களும் சண்டியர்கள்தான் என்றவாறு சினிமாப் பாணியில் பேசலாமே தவிர, முன்வைக்கும் தீர்வை அடைவதற்கு என்ன வழியுண்டு, அதற்காக தமிழ் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? இலங்கை தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கிய எஸ்.ஜே.வி.செல்வநாயகத்திடம் தனிநாட்டை எவ்வாறு அடையப் போகின்றீர்கள் என்று கேட்டதற்கு, அவர் எவ்வாறு, அன்று எந்தவொரு பதிலும் இல்லாமல் இருந்தாரோ - அந்த மிதவாத மரபில்தானே இன்றும் தமிழ் கட்சிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தமிழ் மிதவாதிகளின் வெறுப்பூட்டும் அரசியலில் ஏற்பட்ட அதிருப்தியும் ஆவேசமும்தான் இளைஞர்களை ஆயுத வழியை நோக்கித் தள்ளியது. ஜனநாயக வழிமுறையில் நம்பிக்கை இழக்கச் செய்தது. ஆனால், அந்த மரபிலிருந்து ஜனநாயக அரசியலுக்கு வந்தவர்கள் கூட, இன்றைய அரசியலை கையாளும் தகுதியை இழந்தவர்களாகவே ஊசலாடிக் கொண்டிருக்கின்றனர். இப்போது மீண்டும் தோற்றுப்போன வழிமுறைகளில் தீர்வை அடையப் போகின்றோம் - அது பற்றி ஆராயப் போகின்றோம் என்று கூறுவது யாரை திருப்திப்படுத்துவதற்காக?

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தன்னுடைய கொள்கையை மற்றவர்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்டு விட்டனர் என்பதை காண்பிப்பதற்காக தீர்வு பற்றிய கதையொன்றை ஆரம்பித்திருக்கின்றார். தீர்வு பற்றி பேசுவது - நிலைப்பாடு - நிலைப்பாடுகளை வைத்திருப்பது இங்கு பிரச்சினைக்குரியதல்ல ஆனால், ஒரு நிலைப்பாட்டை முன்வைத்து விட்டு அது பற்றியே பேசிக் கொண்டு காலத்தை விரயம் செய்வதுதான் பிரச்னையானது - புத்திசாதுர்யமற்றது.

அரசியல் என்பது சாத்தியங்களின் கலை - இதனை புரிந்து கொண்டு, கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் கெட்டியாக பற்றிக் கொள்ளும் போதுதான், அரசியலில் அடைவுகளை காண முடியும். இதுவரையில் தமிழ் கட்சிகளால் எந்தவோர் அரசியல் அடைவுகளையும் காண்பிக்க முடியவில்லை. இதனைக் கருத்தில் கொண்டுதான் தமிழ் கட்சிகள் தீர்வு தொடர்பில் பேச வேண்டும்.



## விவசாயின் மோ. சைக்கிள் தீக்கிரை!

முல்லைத்தீவு,ஜன.18

மல்லாவி கல்விளான் பகுதியில் வயல் வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டது.

வயல்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டு கொண்டிருந்த விவசாயி ஒருவரின் மோட்டார் சைக்கிளே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டது. (எ-05)

## யாழில் 217 மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்



யாழ்ப்பாணம்,ஜன.18

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் தேவையுடைய 217 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாணம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சா. சுதர்சன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன் கலந்து கொண்டார்.(எ-05)

## முருங்கன் மருத்துவமனைக்கு அத்தியாவசியப் பொருட்கள்

### ரிஷாட் பதியுதீன் எம். பி. வழங்கினார்



மன்னார், ஜன.18

மன்னார் மாவட்டத்தின் முருங்கன் மற்றும் சிலாவத்துறை பிரதேச மருத்துவ மனைகளுக்கு நேற்று முன்தினம் சென்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், மருத்துவ மனைகளுக்கு தேவையான சில அத்தியாவசியப் பொருட்களை கையளித்தார்.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர் முத்து முஹம்மட், கட்சியின் உயர்பீட உறுப்பினர் மருத்துவர் மிக்றா மற்றும் மருத்துவர் ஒஸ்மன், மருத்துவர் கியாஸ், கட்சியின் முக்கியஸ்தர்களான பைறூஸ், சாஹிர், ஞானராஜ், சந்திரிகா, ராபி மௌலவி, ஜௌசி, ஹலீம் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.(எ)

## களுதாவளை கடற்கரையில் நேற்று கரையொதுங்கியது மர்மப்பொருள்




மட்டக்களப்பு, ஜன.18

மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளைக் கடற்கரையில் நேற்று வெள்ளிக்கிழமை மர்மப் பொருள் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

நேற்று அதிகாலை வேளையில் கடற்கரைக்குச் சென்ற மீனவர்கள் தாம் இதுவரையில் அறிந்திராத மர்மப் பொருள் ஒன்று கரையொதுங்கியுள்ளதை அவதானித்துள்ளதாகவும், பின்னர் அதனைக் கரைசேர்த்து வைத்துள்ளதாகவும் தெரிவித்தனர். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி - 18 சனிக்கிழமை-
குரோதி வருடம் - தை 05
நல்ல நேரம்: 7.31 -9.00
ராகு காலம்:9.00 - 10.30
திதி : சதுர்த்தி




**மேடம்**

புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திவரும். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும்.

**இடபம்**

எதிர்ப்புகள் அடங்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாய்வழி உறவினர்களால் மனஸ் தாபம் வந்து நீங்கும். உழைப்பால் உயரும் நாள்.

**மிதுனம்**

குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். சொந்த பந்தங்களின் சுயரூபத்தை அறிந்து கொள்வீர்கள்.

**கடகம்**

கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். பணப்பற்றாக்குறையால் பிறரிடம் கைமாற்றாக வாங்க வேண்டி வரும்.

**கன்னி**

குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். அண்டை அயலார் சிலரின் செயல்பாடுகளால் கோபம் எரிச்சல் அடையலாம்.

**துலாம்**

தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீரகள். வாகன வசதிப் பெருகும். உங்களுடைய எதிர் பார்ப்புகளுக்கு தகுந்தாற்போல் ஒருவர் அறிமுகமாவார்.

**விருட்சிகம்**

தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் அந் தஸ்து உயரும். வீடு வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். முயற்சிகளில் வெற்றி கிட்டும் நாள்.

**தனுசு**

குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். புதிய சிந்தனைகள் பிறக்கும். புது அனுபவம் உண்டாகும்.

**மகரம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் எடுத்த வேலையை முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். பிள்ளைகளிடம் எதிர்மறையாக பேசாதீர்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**கும்பம்**

மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வாகனத்தை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**மீனம்**

குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பளிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். சுப நிகழ்ச்சியில் கலந்துக் கொள்வீர்கள். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். அதிர்ஷ்டமான நாள்.

# வறுமை மாணவர்களின் கல்விக்கு ஒருபோதும் தடையாகி விடக்கூடாது

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.18

வறுமை மாணவர்களின் கல்விக்கு ஒருபோதும் தடையாக அமைந்து விடக்கூடாது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் தேவையுடைய 217 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாணம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சா. சுதர்சன் தலைமையில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர், பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தார். இதில் உரையாற்றிய ஆளுநர் மேலும் கூறுகையில்,

"கல்வி வாழ்க்கைக்கு முக்கியமானது. கல்வியில்லாதவர்கள் இரண்டு கண்களும் இல்லாதமைக்கு சமனானவர்கள். நான் யாழ். மாவட்டச் செயலராக இருந்த காலத்தில் பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் என்னை சந்திக்க வந்திருக்கின்றார்கள். பிள்ளைகள் கற்பதற்கு ஆர்வமாக இருந்தபோதும் அவர்களுக்கு சீருடைகள், கற்றல் உபகரணங்கள் இல்லாமல் இருக்கின்றன என்று கூறுவார்கள்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் கல்வியைக் கைவிடக்கூடாது.

வறுமையிலிருப்பவர்களுக்கு உதவுவதற்கு எமக்கு எந்தவொரு சுற்றறிக்கைகளும் தடையாக இருக்கப்போவதில்லை. நாம் சரியானதை சரியாகச் செய்தால் எதற்கும் பயப்பட தேவையில்லை. யாழ்ப்பாண பிரதேச செயலர் சுதர்சன், ஏனைய பிரதேச செயலர்களிலிருந்து வித்தியாசமானவர். இன்று உங்களுக்கான கற்றல் உபகரணங்களை அவர் பெற்றுத் தந்திருக்கின்றார். வறுமையைப்போக்க அவர் எடுக்கும் நடவடிக்கைகள் சிறப்பானவை- என்றார். (எ-05)

# விளையாட்டு விழா பரிசளிப்பு நிகழ்வு






யாழ்ப்பாணம்,ஜன.18

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழா - பரிசளிப்பு நிகழ்வு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அரசாங்க அதிபர் ம. பிரதீபனும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத் தின் பணிப்பாளர் பா. முகுந்த னும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள் விளையாட்டு வீர வீராங்கனைகள் கலந்து கொண்டனர். (எ-05)

# மாணவர்களுக்கான போக்குவரத்து குறித்து யாழ்ப்பாணத்தில் பல்வேறு தீர்மானங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.18

பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவையை நடத்தும் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் சிற்றூர்தி உரிமையாளர்களுடான கலந்துரையாடல் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துச் சேவைகளில் ஏற்படும் தடங்கல்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1.கொழும்புத்துறையிலிருந்து யாழ். நகருக்கு வரும் பாடசாலை மாணவர்களுக்கான இ. போ. ச. மற்றும் தனியார் சிற்றூர்தியின் நேர ஒழுங்குகள் சீர் செய்யப்பட்டன.

2.மருதங்கேணி கட்டைக்காட்டிலிருந்து உடுத்துறைக்கு வரும் பாடசாலை மாணவர்களுக்கான இ. போ. ச. பேருந்துச் சேவை மற்றும் உசன் கெற்பெலி பகுதிகளிலிருந்து சாவகச்சேரி நகருக்கு வரும் பாடசாலை மாணவர்களுக்கான இ. போ. ச. பேருந்துச் சேவைகள் தொடர்பாக பாடசாலை மாணவர்களின் பாடசாலை நேரத்துக்கு அமைவாக நேர ஒழுங்குகள் சீர்செய்யப்பட்டன.


3.அச்சுவேலி இராசபாதை ஊடாக யாழ். நகருக்கு வரும் இ. போ. ச. பேருந்தில் பாடசாலை மாணவர்களுக்கான இடையூறு ஏற்படாதவகையில் பேருந்து சேவை நடைபெறுவதனை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களைக் கொண்டு உறுதிசெய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (எ-05)

# கண்டாவளையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 245 குடும்பங்கள் இடைத்தங்கல் முகாம்களில்

கிளிநொச்சி,ஜன.18

கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 245 குடும்பங்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இரணைமடுக்குளத்தின் மேலதிக நீர் வெளியேற்றப் பட்டு வருகிறது. இதனால், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கண்டாவளை ஐயன்கோவிலடி, பெரியகுளம், ஊரியான் பகுதிகளில் வசிக்கும் மக்கள் இடைத் தங்கல் முகாம் களில் தங்க வைக் கப்பட்டுள்ளனர். கண்டாவளை மகா வித்தியாலயத்தில் 147 குடும்பங்க ளைச் சேர்ந்த 371 பேரும் ஐயன் கோவிலடி பாடசாலையில் 26 குடும்பங்களைச் சேர்ந்த 68 பேரும் ஊரியான் பகுதியில் 62 குடும்பங்களைச் சேர்ந்த 190 பேரும் பெரியகுளத்தை சேர்ந்த 10 குடும்பங்களில் 31 பேரும் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சுகாதார வசதிகளும் ஏற்படுத் தப்பட்டுள்ளன.



(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவு எங்களுக்கு சவால் கிடையாது!

## கூறுகிறார் அமைச்சர் கே.டி. லால்காந்த

கொழும்பு, ஜன. 18

**தேர்தல்களில் தோல்வியடைந்த கட்சிகள் ஒன்றிணைந்து உள்ளூராட்சித் தேர்தலில் இணைவது தேசிய மக்கள் சக்திக்கு எந்த சவாலையும் ஏற்படுத்தாது என்றும், அது தற்போதுள்ள பூச்சியத்துடன் மற்றொரு பூச்சியத்தைச் சேர்ப்பது போன்றது என்றும் விவசாயம், காணி, நீர்ப்பாசனம் மற்றும் கால்நடை அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்தார்.**



நீதிமன்ற உத்தரவும் இருப்பதால், உள்ளூராட்சித் தேர்தல்கள் பெரும்பாலும் மார்ச் மாத இறுதியில் அல்லது ஏப்ரல் தொடக்கத்தில் நடைபெறும் என்றும், அரசாங்கம் தற்போது செயல்படுத்தி வரும் நல்ல திட்டங்களை மக்கள் பாராட்டுவார்கள் என்றும் அவர் கூறினார்.

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்துக்குப் பிறகு ஊடகங்களிடம் பேசிய கே.டி. லால்காந்த மேலும் தெரிவிக்கையில்-மக்கள் நிராகரித்த அனைத்து குழுக்களும் ஒரு தேர்தலில் ஒன்றாகப் போட்டியிட்டால் நல்லது. இப்போது அவர்கள் சொல்ல வேண்டியது அவர்கள் ஒன்றுபடுவார்கள் என்பதுதான். அவர்கள் ஒன்றாகப் போட்டியிட்டு தோல்வியடையும் போது, அந்தப் பேச்சும் நின்றுவிடும். தேசிய மக்கள் சக்தி நாட்டில் நல்ல அரசியல் பணிகளைச் செய்து வருகிறது. எனவே, யார் இணைந்தாலும், எங்களுக்கு சவாலாக மாற மாட்டார்கள். உள்ளூராட்சித் தேர்தலை இலக்காகக் கொண்டு எந்த சிறப்பு பிரசாரத் திட்டங்களையும் நாங்கள் செய்யத் தேவையில்லை. நாங்கள் மேற்கொண்டு வரும் திட்டத்திற்கும் பணிகளுக்கும் மக்கள் சாதகமாக பதிலளித்து வருகின்றனர்.

சிலர் சுட்டிக்காட்டுவது போல் அரிசி பிரச்னை இல்லை. கண்டி நகரில் நான் கவனித்தபோது, அரிசி தொடர்பாக பெரிய பிரச்னை எதுவும் இல்லை என்பதை அறிந்துகொண்டேன்.

நாங்கள் சரிந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்புகிறோம். அரசாங்கம் விரும்பாவிட்டாலும் சில முடிவுகளை எடுக்க வேண்டும். அதனால் தான் சில பொருட்களின் மீதான வரிகளை அதிகரிக்க வேண்டியிருந்தது.

நான் தனிப் பட்ட முறையில் வருந்துகிறேன்.

இருப்பினும், மக்களுக்கு ஒரு சிறந்த நாளை யை உருவாக்க, இதுபோன்ற முடிவுகள் இன்று எடுக்கப் படவேண்டும்- என்றார். (அ)

# டிஜிற்றல் கொடுப்பனவுகள் ஊக்குவிப்பு திட்டம் அறிமுகம்

கொழும்பு, ஜன. 18

இலங்கை மத்திய வங்கி இந்த ஆண்டில் டிஜிற்றல் கொடுப்பனவுகள் ஊக்குவிப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

"டிஜிற்றல் கொடுக்கல் வாங்கல்கள் ஊடாக எதிர்காலத்தை வடிவமைத்தல்" எனும் தொனிப்பொருளின் கீழ் இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தலைமையில் அம்பாந்தோட்டை மாகம் ருகுணுபுர நிர்வாக வளாகத்தில் நடைபெற்றுள்ளது.

டிஜிற்றல் மயமாக்கல் மூலம் நிலையான மற்றும் நிதி ரீதியாக உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கான மூலோபாயத் திட்டத்துக்கு அமைய இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

# பஸ்-மோ.சைக்கிள் மோதி 2 மாணவர்கள் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 18

அநுராதபுரம், நொச்சியாகம, காலதிவுல்வெவ பிரதேசத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற விபத்தில் இரு பாடசாலை மாணவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என காலதிவுல்வெவ பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நொச்சியாகம காலதிவுல்வெவ பிரதேசத்தில் வசிக்கும் 16 வயதுடைய இரு பாடசாலை மாணவர்களே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த இரு மாணவர்களதும் சடலங்கள் நொச்சியாகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் பஸ் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காலதிவுல்வெவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சிவில் பாதுகாப்பு அதிகாரி துப்பாக்கியுடன் சிக்கினார்

கொழும்பு, ஜன. 18

வெல்லம்பிட்டிய - மீதொட்டமுல்ல பகுதியில் ரி-56 ரக துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக நேற்று வியாழக்கிழமை வெலிகந்த பொலிஸ் பிரிவில் ருஹுணுகெத பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

ருஹுணுகெத, வெலிகந்த பகுதியைச் சேர்ந்த 53 வயதுடை சிவில் பாதுகாப்பு அதிகாரியாகக் கடமையாற்றி வரும் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபரிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கியுடன் தோட்டா பை மற்றும் 18 தோட்டாக்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

நீதிமன்ற அனுமதியுடன் சந்தேக நபரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்காக வெல்லம்பிட்டிய பொலிஸார் மற்றும் குற்றத் தடுப்புப் பிரிவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

பணியாளருக்கு பாலியல் துன்புறுத்தல்

# குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட 3 பாராளுமன்ற பணியாளர்கள் பணிநீக்கம்

கொழும்பு, ஜன. 18

பாராளுமன்ற பெண் பணியாளருக்கு பாலியல் துன்புறுத்தல் மேற்கொண்டமை தொடர்பில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட மூன்று பாராளுமன்ற பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பில் பல கட்டங்களாக விசாரணைகள் நடத்தப்பட்டு இதன் அடிப்படையில் மூன்று பணியாளர்கள் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவின் பரிந்துரைக்கு அமைய குறித்த மூன்று பணியாளர்களையும் பணிநீக்கம் செய்வதற்கு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன ஒப்புதல் வழங்கினார்.

2021 மற்றும் 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாராளுமன்ற பெண் பணியாளர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் 2023 ஜூலை 30 மற்றும் ஒகஸ்ட் 02ஆம் திகதிகளில் பத்திரிகைகளில் செய்தி வெளியானதைத் தொடர்ந்து அப்போதைய சபாநாயகரின் அறிவுறுத்தலுக்கு அமைய இது தொடர்பில் விசாரணை மேற் கொள்ள பாராளுமன்றத்தின் அப்போதைய நிர்வாகப் பணிப் பாளர் தலைமையில் மூவர் அடங்கிய உள்ளக விசாரணைக் குழுவை பாராளுமன்ற செயலாளர் நாயகம் 2023.08.04ஆம் திகதி நியமித்திருந்தார்.

இந்தக் குழு முன்னெடுத்த விசாரணைகளுக்கு அமைய பாராளுமன்ற பணியாளர்கள் இருவர் இடைநீக்கம் செய்யப்பட்டிருந்ததுடன், குழுவின் அறிக்கை 2023.08.23ஆம் திகதி பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலதிக அறிவுறுத்தல்களைப் பெறுவதற்காக குறித்த அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய இது தொடர்பான விசாரணை பொலிஸ்மா அதிபரின் ஊடாக சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகத் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தப் பொலிஸ் பிரிவின் விசாரணைக்கு அமைய மற்றுமொரு பாராளுமன்ற பணியாளர் கைது செய்யப்பட்டு 2024.01.30ஆம் திகதி குறித்த பணியாளர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டார்.

இதற்கு அமைய இது தொடர்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதையடுத்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என குற்றஞ்சாட்டப்பட்ட பணியாளர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்று விசாரணையை நடத்துவதற்காக ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜினி வீரவர்தன நியமிக்கப்பட்டார்.

இந்த ஒழுக்காற்று விசாரணையின் இறுதி அறிக்கை 2024.12.23ஆம் திகதி பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவிடம் கையளிக்கப்பட்டதுடன், இதனை அடிப்படையாகக் கொண்டு சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மூவரும் இடை நீக்கம் செய்யப்பட்ட தினத்திலிருந்து பணி நீக்கம் செய்யுமாறு சபாநாயகரிடம் விடுத்த பரிந்துரைக்கு அமைய இவர்களைப் பணிநீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# அரசு நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோரவேண்டும்

## திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்து

கொழும்பு, ஜன. 18

தேர்தலுக்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படாமையால் அரசாங்கத்தின் மீது மக்கள் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர். மக்களை ஏமாற்றி ஆட்சியைக் கைப்பற்றியதைத் தவிர இந்த அரசாங்கம் வேறு எதனையும் செய்யவில்லை. எனவே அதனை ஏற்றுக்கொண்டு அரசாங்கம் மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-எரிபொருள் விலை, மின்சாரக் கட்டணம் மற்றும் பொருட்களின் விலைகள் என அனைத்தையும் குறைப்பதாக தேர்தலுக்கு முன்னர் வாக்குறுதியளிக்கப்பட்டது.

ஆனால் அவை தற்போது வரை நிறைவேற்றப்படாமையால் மக்கள் அரசாங்கத்தின் மீது கடும் அதிருப்தியிலிருக்கின்றனர். மக்களை ஏமாற்றி ஆட்சியைக் கைப்பற்றியதைத் தவிர இந்த அரசாங்கம் வேறு எதனையும் செய்யவில்லை-என்றார். (அ)

# ரணில், மகிந்த, கோட்டாபயவுடன் மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி!

கொழும்பு, ஜன. 18

மாலைதீவு நாட்டின் முன்னாள் ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் சோலி முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்ரமசிங்க, மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

[illegible] முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் சோலி சந்தித்துள்ளார்.

இது குறித்து மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி எக்ஸ் தளத்தில், இன்று (15ஆம் திகதி) பிற்பகல் கொழும்பில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தேன். மாலைதீவுக்கும் இலங்கைக்கும் இடையிலான மிகச் சிறந்த உறவுகள் மற்றும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் தொடர்ந்து அமைதி மற்றும் பாதுகாப்பு, அரசியல் உட்பட பல விடயங்களை நாங்கள் மிகவும் கலகலப்பான மற்றும் சுவாரஷ்யமாக உரையாடினோம் என பதிவிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில்-சஜித் இணைவுக்கான பேச்சுக்கு இரு தரப்பிலும் குழு!

## தெற்கு அரசியலில் திடீர் திருப்பம்

கொழும்பு, ஜன. 18

**ஐக்கிய தேசியக் கட்சியையும், ஐக்கிய மக்கள் சக்தியையும் ஒரு கூட்டணியின் கீழ் ஒன்றிணைப்பதற்குரிய பேச்சுகளை முன்னெடுப்பதற்காக இரு தரப்புகளில் இருந்தும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.**



ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள குழுவில் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, கபீர் ஹாசீம், ஹர்சன ராஜகருண ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் பொதுச்செயலாளர் தலதா அத்துகோரள, பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன உள்ளிட்டவர்கள் பேச்சுகளுக்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இரு தரப்புகளுக்குமிடையில் உத்தியோகபூர்வமற்ற விதத்தில் ஏற்கனவே பேச்சுகள் ஆரம்பமாகி இருந்தாலும், அடுத்து வரும் நாள்களில் அதிகாரபூர்வமாக ஆரம்பமாகவுள்ளன.

(அ)

# 30 கப்பல்களை திருப்பி அனுப்பி பெரும் நட்டம் ஏற்படுத்திய அரசு!

கொழும்பு, ஜன. 18

துறைமுகத்துக்கு வரும் கப்பல்களை பரிசோதனை செய்து விடுவிக்க முடியாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டிருக்கிறது. விடயத்துக்கு பொறுப்பான பிரதி அமைச்சர் துறைமுக நிலைமையை கண்காணிக்க வந்தபோது, கொழும்பு துறைமுகத்துக்கு வந்த 30 கப்பல்கள் திருப்பி அனுப்பப்பட்டதாக சிரித்துக்கொண்டே தெரிவித்தார். ஆனால் 30 கப்பல்களை திருப்பி அனுப்பியதன் மூலம் நாட்டுக்கு பாரியளவில் நட்டம் ஏற்படுகின்றது என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

துறைகத்தில் இருந்து விடுவிக்கும் பொருட்களை கொண்டு செல்ல வந்திருக்கும் பார ஊர்திகள் பல நாட்களாக வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறன.

இந்த பிரச்னைக்கு தீர்வு காண ஜனாதிபதி துறைமுக அதிகாரிகள் மற்றும் சுங்க திணைக்கள அதிகாரிகளைச் சந்தித்து, துறைமுக ஊழியர்கள் 24 மணிநேரம் வேலை செய்து பிரச்னை தீர்க்க நடவடிக்கை எடுத்திருப்பதாக அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இந்த பிரச் னைக்கு தீர்வு காண முடியாமல் போயிருப்பதால் 17 கொள்க லன்கள் துறைமுகத்துக்குள் இறுகி இருப்பதாக வெளிவரும் தரவுகள் மூலம் தெரியவருகிறது-என்றார்.

(அ)

# கடலில் நீராடிய கனேடியர் மாயம்!

கொழும்பு, ஜன. 18

ஹிக்கடுவை கடற்கரையில் நீராடச் சென்ற வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போனதாக பொலிஸார் தெரிவித்தனர்.

19 வயதான கனேடியர் ஒருவரே காணாமல் போனவர் ஆவார். இவர் குளிக்கச் சென்ற இடத்தில் அபாய பதாகை வைக்கப்பட்டு இருந்த நிலையில், அதைப் பொருட்படுத்தாமல் கடலில் குளிக்கச் சென்றமை ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்தது.

காணாமற்போன நபரை தேடும் பணியில் பொலிஸாரின் உயிர்காக்கும் படையினரும் கடற்படையின் உயிர்காக்கும் படையினரும் இணைந்து ஈடுபட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹிக்கடுவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# விடைத்தாள் மதிப்பீட்டுக்கு ஆசிரியைகள் அணிந்து சென்ற ஆடைகளினால் பரபரப்பு!

கொழும்பு, ஜன. 18

பன்னிப்பிட்டிய தர்மபால வித்தியாலயத்தில் நிறுவப்பட்டுள்ள உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நிலையத்தில் விடைத்தாள்களை மதிப்பிடுவதற்காக வருகை தந்த ஆசிரியைகள் கவுண் ஆடை அணிந்து வந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன் தினம் பாடசாலை நடைபெறும் நாள் என்ற காரணத்தினால், பாடசாலைக்குள் பிரவேசிப்பதாயின் சேலை அணியவேண்டும் என்று அறிவுறுத்தப்ப ட்டிருந்தபோதிலும், ஆசிரியைகள் கவுண் அணிந்து வந்துள்ளார்கள் எனவும், இதனால் அவர்களை பாடசாலைக்குள் அனுமதிக்க அதிபர் மறுப்பு தெரிவித்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் பரீட்சைகள் ஆணையாளரின் கட்டுப்பாட்டில் இடம்பெறுவதால், இது தொடர்பில் பாடசாலை அதிபருக்கு பொறுப்புக்கூற வேண்டிய அவசியமில்லை என குறித்த ஆசிரியைகள் தெரிவித்துள்ள தாகக் கூறப்படுகின்றது. இதனால் இரு குழுக்களுக் கும் இடையே வாக்குவாதங்கள் இடம்பெற்றதாகவும், இதனையடுத்து விடைத்தாள் மதிப் பீட்டு நிலையத்தை தற்காலி கமாக மூடுமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவு றுத்தியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பணம் வழங்குவதாகக் கூறி வரும் குறுஞ்செய்திகளால் ஏமாறாதீர்கள்

## கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 18

பணம் வழங்குவதாகக் கூறி கையடக்கத் தொலைபேசிகளில் வரும் குறுஞ்செய்திகள் மற்றும் தொலைபேசி அழைப்புகளைக் கண்டு ஏமாறவேண்டாம் என இலங்கை கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவு பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து இலங்கை கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவின் சிரேஷ்ட பொறியியலாளர் சாருக தமுனுகல கருத்துத் தெரிவிக்கையில்-

போலியான தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு பணம் வசூலிப்பவர்கள் குறித்து தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த நாட்களில் பொதுமக்களின் கையடக்க தொலைபேசிகளுக்கு போலி செய்திகள் வரக் கூடும். இதன் மூலம் நீங்கள் பரிசுத் தொகையை வென்றதாகக் கூறலாம். பல்வேறு சலுகைகள், வீட்டிலிருந்து வேலை செய்யும் வாய்ப்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் போன்றவற்றைப் பற்றிய செய்திகளை நீங்கள் பெறலாம். இதுபோன்ற செய்திகள் மூலம் உங்கள் தனிப்பட்ட தகவல்களை அவர்கள் கோரலாம்.

எனவே பொதுமக்கள் தமது தனிப்பட்ட தகவல்களை அவர்களுக்கு வழங்க வேண்டாம்-என்றார்.

(அ)

# சுற்றுலா பயணிகளுடன் சென்ற பேருந்து விபத்து!

## ஒருவர் பலி! 13 பேர் காயம்!!

கொழும்பு, ஜன. 18

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று நேற்று அதிகாலை சிமெந்து ஏற்றிச் சென்ற லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பதின்மூன்று பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் தங்காலை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் மூன்று வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் சுற்றுலா வழிகாட்டி ஒருவரும் உள்ளடங்குவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

விபத்துக்குள்ளான பேருந்தில் 12 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பயணித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# ரயிலில் மோதுண்டுவயோதிபர் மரணம்!

கொழும்பு, ஜன. 18

குருநாகல் மாவட்டம் வெல்லவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முத்தெட்டுகல பிரதேசத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு ரயிலில் மோதுண்டு வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என வெல்லவ பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் குருநாகல் ,தோரயாய பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய வயோதிபர் ஆவார்.

இவர் கொழும்பு கேட்டையிலிருந்து கணேவத்தை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை வெல்லவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் தலைவரால் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு!

கொழும்பு, ஜன. 18

சுகாதார சேவைக்கு எதிரான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் வெளியிடுதல் தொடர்பாக, அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் வைத்தியர் மனுஜ் சி வீரசிங்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றைக் கையளித்துள்ளார்.

நேற்று முன் தினம் கையளிக்கப்பட்ட குறித்த முறைப்பாட்டில் அரசாங்க சுகாதார சேவைகளை சீர்குலைக்க அல்லது சீர்குலைக்கும் நோக்கத்தில் இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த விவகாரம் குறித்து முழுமையான விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் அரச மருந்தகக் கூட்டுத் தாபனத்தின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# கடந்த வருடம் சுற்றுலா பயணிகளால் 3.17 பில்லியன் டொலர்கள் வருமானம்!

கொழும்பு, ஜன. 18

கடந்த வருடம் நாட்டின் சுற்றுலா வருமானமாக 3.17 பில்லியன் அமெரிக்க டொலர் ஈட்டப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 53.2 வீத வளர்ச்சியாகும் என இலங்கை மத்திய வங்கியின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

2023ஆம் ஆண்டு சுற்றுலா வருமானமானது 2.0 பில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியிருந்தது.

கடந்த வருடம் 20 இலட்சத்து 53465 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்தனர்.

இந்த வருடம் 3 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்ட திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் சொல் ஒன்று செயல் வேறொன்று!

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 18

**நாட்டின் ஜனாதிபதி சகல நாடுகளுடனும் இராஜதந்திர உறவுகளைப் பேணவேண்டும். மக்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்துக்கு எதிர்க்கட்சியும் ஆதரவளிக்கும். ஆனால் தற்போதைய அரசாங்கம் கூறியதற்கும் செய்வதற்கும் இடையில் கடுமையான முரண்பாடுகள் காணப்படுகின்றன.**

மின்சாரக் கட்டணம், எண்ணெய் விலைக் குறைப்பு, எரிபொருள் விலை குறைப்பு, உர மானியம் போன்றவற்றைச் செய்ததாகக் கூறினாலும் அவை இன்னும் நிறைவேற்றப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டம் நேற்று கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து கட்சி தலைமையகம் முன்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பெரும் மக்கள் ஆணையைப் பெற்று ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம், அந்த ஆணையை மதித்து, மக்கள் எதிர்பார்க்கும் சலுகைகளை வழங்கி மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். அரசாங்கம் மக்களுக்கு இந்த பணியை ஆற்றாவிட்டால் எதிர்க்கட்சி மக்களுக்காக முன்நின்று, ஜனநாயக கட்டமைப்பில் குரல் எழுப்பும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு கூடியபோது, மக்கள் மீதான அரசின் அடக்கு முறைக்கு எதிராக நாம் முன் நிற்க வேண்டும் என ஆலோசிக்கப்பட்டது. அதுமட்டுமின்றி எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு எதிர்க்கட்சி தயார். இதனை எதிர்கொள்வதற்கு எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடல்களை முன்னெடுப்போம்-என்றார். (அ)

# இயலாமையை மறைக்க முயற்சிக்கின்றது அரசு!

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 18

அரசியல் பழிவாங்கல் இடம்பெறுவதற்கான சமிஞ்ஞை தென்படுவதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்தரமுல்லை, நெலும் மாவத்தையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுன காரியாலயத்தில் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான தகவல்களை முன்வைக்க புதிய காரியாலயம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த திறப்பு விழாவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நாமல் ராஜபக்ஷ-

அரசாங்கம் அரசியல் பழிவாங்கலை மேற்கொள்வதற்கான சமிஞ்ஞையே வெளிப்படுகின்றது. 17 பில்லியன் டொலர் பணம் உகண்டாவில் உள்ளதென்றால் அதனை நாட்டுக்கு கொண்டுவரும் விடயத்தில் எமக்கு சிக்கல் இல்லை.

மாறாக அரசாங்கத்தின் இயலாமையை மறைக்க கடந்த அரசாங்கங்களை போன்று வழக்கு தாக்கல் செய்து எம்மை பழிவாங்கலுக்கு உட்படுத்தும் பட்சத்தில் அதற்கு எதிராக எமது சட்டத்தரணிகள் நடவடிக்கை எடுப்பர்.

எம்முடைய கட்சியின் தொழிற்சங்கம் எந்த சந்தர்ப்பத்திலும் அரச சேவையை வீழ்த்தும் வகையில் செயற்படவில்லை. மாறாக நாட்டுக்கு அபிவிருத்தித் திட்டங்களை முன்கொண்டு செல்லும் செயற்பாட்டையே மேற் கொண்டுள்ளது-என்றார். (அ)

# அஸ்வெசும பயனாளர்களின் நிதியை அதிகரிக்க அனுமதி!

கொழும்பு, ஜன. 18

அஸ்வெசும பயனாளர்களுக்காக வழங்கப்படும் நிதியை அதிகரிப்பது தொடர்பான யோசனைக்கு அரசாங்க நிதி பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, வறிய குடும்பம் ஒன்றுக்காக வழங்கப்படும் 15,000 ரூபாய் கொடுப்பனவு 17,500 ரூபாவாக அதிகரிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், 8,500 ரூபாய் வழங்கப்படும் குடும்பம் ஒன்றுக்கான கொடுப்பனவு 10,000 ரூபாவாக அதிகரிக்க அரசாங்க நிதி பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

2,500 ரூபாய் வழங்கப்படும் குடும்பம் ஒன்றுக்காக 5000 ரூபாவை வழங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 5,000 ரூபாய் வழங்கப்படும் குடும்பங்களுக்கான கொடுப்பனவை மாற்றமின்றி தொடர அரசாங்க நிதி பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது. (அ)

# திருமலை எண்ணெய் தாங்கிகளை புனரமைக்க புதிய வேலைத்திட்டம்

கொழும்பு, ஜன. 18

திருகோணமலையிலுள்ள எண்ணெய் தாங்கிகளை புனரமைத்து மீண்டும் பாவனைக்கு எடுப்பதற்காக புதிய வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி உள்ளிட்ட தரப்பினர் குறித்த எண்ணெய் தாங்கிகளை அண்மையில் பார்வையிட்டதாக வலுசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

500 ஏக்கர் காணியில் அமைக்கப்பட்டுள்ள 99 எண்ணெய் தாங்கிகளில் 24 தாங்கிகளின் முழுமையான உரிமை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தானதாகும்.

அவற்றைப் பயன்படுத்தி எரிபொருளைக் களஞ்சியப்படுத்துவதன் மூலம் சர்வதேசக் கப்பல்களுக்கு எரிபொருளை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு கூறியுள்ளது.

அதற்கமைய திருகோணமலை துறைமுக முனையத்தையும் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட் டுள்ளது. (அ)

# தோட்ட பாடசாலைகளில் 60 ஸ்மார்ட் வகுப்பறைகள்

## இந்தியா நிதி உதவி

கொழும்பு, ஜன. 18

தேர்ந்தெடுக்கப்பட்ட தோட்டப் பாடசாலைகளில் 60 ஸ்மார்ட் வகுப்பறைகளை நிறுவுவது தொடர்பாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் 508 மில்லியன் ரூபாய் மானிய உதவியுடன் இலங்கையின் தோட்டப் பகுதிகளில் 'தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் 60 ஸ்மார்ட் வகுப்பறைகளை நிறுவுதல்' குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம், இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சகத்தின் செயலாளர் பி.கே.பிரபாத் சந்திரகீர்த்தி ஆகியோருக்கு இடையில் நேற்று முன் தினம் கைச்சாத்திடப்பட்டது.



இந்தத் திட்டத்தின் ஊடாக நுவரெலியாவில் உள்ள 48 பாடசாலைகளிலும், இலங்கை அரசாங்கத்தால் அடையாளம் காணப்பட்ட கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் தலா 6 பாடசாலைகளிலும் இவ்வாறு 60 ஸ்மார்ட் வகுப்பறைகளை நிறுவவப்பட உள்ளன. (அ)

# மின்சார கட்டணம் 1/3 பங்கு குறையும்!

கொழும்பு, ஜன. 18

புதுப்பிக்கத்தக்க மின்சாரம் தேசிய மின்சாரக் கட்டமைப்பில் மேலும் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதால் விரைவில் மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்படும் என பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்படும் என தேசிய மக்கள் சக்தி வெளியிட்டிருந்த கருத்து குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இதன் பிரகாரம் மின்சாரக் கட்டணங்கள் விரைவில் மூன்றில் ஒரு பங்கு குறைக்கப்படும். மின்சார அமைப்பில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களைச் சேர்ப்பது ஆபத்தானது என்று சிலர் கடந்த காலங்களில் கூறியிருந்தனர்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றலை அதிகரிப்பதற்கான திட்டங்களை வகுத்து அரசாங்கம் செயல்பட்டு வருகிறது. அந்த மின்சாரம் தேசிய கட்டமைப்பில் இணைக்கப்படும் போது மின்சாரக் கட்டணம் குறைவடையும்-என்றார். (அ)

# பிணை மனு சமர்ப்பித்த மனுஷ!

கொழும்பு, ஜன. 18

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார கொழும்பு நீதவான் நீதிமன்றில் பிணை மனுவொன்றை சமர்ப்பித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் துறையில் ஆஜராகுமாறு மனுஷ நாணக்காரவுக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அவர் இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தின்போது வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் வழங்குவதில் ஏற்பட்டுள்ள ஊழல் மோசடிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# 1100 கொள்கலன் தாங்கி பாரவூர்திகள் கொழும்புத் துறைமுகத்தில் தேக்கம்!

கொழும்பு, ஜன. 18

1,100 கொள்கலன் தாங்கிப் பாரவூர்திகள் துறைமுகம் மற்றும் சுங்கத்தில் தேங்கியுள்ளதாக அகில இலங்கை கொள்கலன் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை கொள்கலன் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள இதனைத் தெரிவித்தார்.

இதுதவிர, சீ.ஐ.சீ.டீ தளத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுடன் 400 கொள்கலன் தாங்கிகள் தேங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த கொள்கலன் தாங்கிப் பாரவூர்திகளை விடுவிப்பதற்கான உரிய நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு.வாழைச்சேனையில் மீளவும் காகித உற்பத்தி ஆலை இயங்கும்

மட்டக்களப்பு, ஜன.18

**இலங்கையின் காகித உற்பத்திக்கு புத்துயிர் ஊட்டும் விதமாக மட்டக்களப்பு, வாழைச்சேனை காகித தொழிற்சாலையின் செயல்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.**

இந்த காகித தொழிற்சாலையில் பழுதடைந்த இயந்திரங்கள் சரி செய்யப்பட்ட பின்னர் தொழிற்சாலையின் செயல்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் தேசிய பொருளாதார மற்றும் பௌதீக திட்டமிடல் தொடர்பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழு, வாழைச்சேனை காகித தொழிற்சாலையை மூடுவதற்குப் பதிலாக, பழுதடைந்த இயந்திரங்களை சரி செய்வதற்கான வேலைகளை முன்னெடுக்கத் தீர்மானித்தது.

குறித்த தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்கள் 1956 ஆம் ஆண்டு இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள் என்பதால் பழுதுபார்க்கும் வேலைத்திட்டத்துக்காக சுமார் 1. 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என்று கணிக்கப்பட்டது.

இந்த தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்களை புதுப்பித்தால், ஒரு நாளைக்கு 5 தொன் காகிதம் உற்பத்தி செய்ய முடியும்.

இதன் மூலம் மாதத்துக்கு 22 மில்லியன் ரூபாய் இலாபம் பெற முடியும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (எ)

# ஆசிரியர் ஆட்சேர்ப்பு நடவடிக்கை நீதியாக இடம்பெற வேண்டும்

## கிழக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை

திருகோணமலை,ஜன.18

ஆசிரியர் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் நீதியாக இடம் பெற வேண்டும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த 03. 08. 2024 அன்று நடைபெற்ற கிழக்கு மாகாண ஆசிரியர் சேவை ஆட்சேர்ப்பு போட்டி பரீட்சைக்கான நேர்முகப் பரீட்சைகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால், மூன்று நேர்முகப்பரீட்சை சபைகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே. எஸ். அருள் ராஜ் ஆகியோரும் இதில் பங்கு பற்றினர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஆளுநர், எந்தவொரு தரப்பினருக்கும் அநீதி ஏற்படாத வகையில் ஆட்சேர்ப்பு நேர்முகத் தெரிவை நடத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

# வேலைத்திட்டங்களில் பெரும் நிதிமோசடிகள்

## ஒருங்கிணைப்புக்குழுவில் அஷ்ரப் தாஹிர் எம்.பி.

அட்டாளைச்சேனை,ஜன.18



வீதி அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் இடம்பெற்ற பெரும் நிதிமோசடிகள் குறித்து விசாரணை நடத்தப் பட வேண்டும் என்று அஷ்ரப் தாஹிர் எம். பி. வலியுறுத்தியுள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினருமான அஷ்ரப் தாஹிர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

கடந்த 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் அன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நடைமுறைப் படுத்தப்பட்ட ஒலுவில் - 01, அல்- ஹிரா நகர், ஆலிம் நகர் போன்ற பிரதேசங்களின் 16 கிரவல் வீதி அபிவிருத்திகளில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இந்த நிலையில், இது தொடர்பான தகவல்களையும் விளக்கங்களையும், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஆதம்பாவாவிடம் இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.


மேற்படி வீதி அபிவிருத்திகள் தொடர்பான பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபையில் எந்தவித அனுமதிகளும் பெறப்படவில்லை எனத் தெரிய வந்ததுடன் கிரவல் வீதிகளுக்கு மேல் மீண்டும் கிரவல்களை போட்டு மக்கள் வரிப்பணம் மோசடி செய்யப் பட்டுள்ளது எனவும் அஷ்ரப் தாஹிர் கூறினார். (எ)

# கல்முனை மருத்துவமனைகளுக்கு புதிதாக மருத்துவர்கள் நியமனம்

கல்முனை,ஜன.18

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள சுகாதார நிறுவனங்களில் கடமையாற்றும் பொருட்டு புதிதாக சேவையில் இணைத்துக் கொள்ளப் பட்ட மருத்துவர்கள் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

குறித்த மருத்தவர்களுக்கான சேவை நிலையங்களுக்கு கடிதங்கள் கையளித்தல் மற்றும் அறிமுக நிகழ்வு என்பன நேற்று முன்தினம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம். சீ. எம். மாஹிர், பிராந்திய தொற்றா நோய்த் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி இர்ஷாத், பிராந்திய சுற்றுச்சூழல் மற்றும் தொழில் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ. எஸ். எம். பௌசாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புதிதாக சேவையில் இணைந்து கொண்ட மருத்துவர்கள் மத்திய முகாம், இறக்காமம், நிந்தவூர், மாவடிப்பள்ளி ஆகிய மருத்துவமனைகளுக்கு நியமிக்கப்பட்டனர். (எ)

# கரையொதுங்கிய டொல்பின்கள்

கல்முனை, ஜன.18

அம்பாறை, கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மருதமுனையில் அதிகளவான டொல்பின்கள் கரை யொதுங்கியுள்ளன.

இவ்வாறு கரையொதுங்கிய டொல்பின்களை அப்பகுதி சிறுவர்கள் பிடித்து மீண்டும் கடலில் விட்டனர்.

குறித்த டொல்பின்கள் சுமார் 4 முதல் 5 அடி வரையான நீளம் கொண்டதுடன் இப்பகுதியில் ஏற்பட்டுள்ள கடல் கொந்தளிப்பால் இவை கரையொதுங்கியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.(எ)



# திருட்டுப் போன மோ.சைக்கிள் மீட்பு

சம்மாந்துறை, ஜன.18

ஜனவரி முதல் வாரத்தில் திருடிச்செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் இடம்பெற்றதுடன் திருடிச்செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் குறித்து உரிமையாளரால் முறைப்பாடும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டிற்கமைய விசாரணைகளை மேற்கொண்ட சம்மாந்துறை பொலிஸார் பொத்துவில் பிரதேசத்தில் குறித்த மோட்டார் சைக்கிளுடன் சந்தேக நபரையும் கைது செய்தனர்.(எ)

# மழை நேற்று தணிந்தது வெள்ளமும் வற்றியது

## அம்பாறையில் போக்குவரத்து சுமுகம்

காரைதீவு ,ஜன.18

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்த கனமழை நேற்று வெள்ளிக்கிழமை தணிந்தது.

பிரதான வீதிகளுக்கு மேலாக ஓடிய வெள்ளம் வற்றியது.

இதனால் சகல பிரதேசங்களுக்குமான போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

காரைதீவு - அம்பாறை பிரதான வீதியில் காரைதீவு மாவடிப்பள்ளி பிரதேசத்தில் நேற்று முன்தினம் வீதிக்கு மேல் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

எனினும், தற்போது வெள்ளம் வேகமாக குறைந்து போக்குவரத்து எந்த விதமான சிரமமும் இன்றி வழமைக்குத் திரும்பியது.

எனினும், இன்று 18 ஆம் திகதி முதல் நான்கு நாட்கள் பெரும் மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது என முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வளிமண்டல மேலடுக்கு சுழற்சியுடன் மேலைக் குழப்பமும், மேடன் யூலியன் அலையின் வருகையும் இருப்பதனால் இன்று முதல் 21ஆம் திகதி வரை மிகக் கனமழை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இதேவேளை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் நிலம் நிரம்பு நிலையை அடைந்துள்ளது.

கிழக்கு மாகாணங்களின் முக்கிய குளங்களான சேனநாயக்க சமுத்திரம், உன்னிச்சை, கந்தளாய், வாகனேரி, கடுக்காமுனை, நவகிரி, வீராகொடமுகம் குளம் போன்றன கிட்டத்தட்ட அவற்றின் முழுக் கொள்ளளவை எட்டியுள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தாழ்வான பகுதிகளிலும், குளங்களின் மேலதிக நீர் வெளியேறும் பகுதிகளுக்கு அண்மையில் உள்ள மக்களும் இந்த நாட்களில் மிக அவதானமாக இருப்பது அவசியம் என யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா அறிவித்துள்ளார். (எ)



கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 850 பேருக்கு லயன்ஸ் கழகத்தால் 43 இலட்சம் ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணய கைதிகளை விடுவிக்க இஸ்ரேல் - ஹமாஸ் ஒப்பந்தம்

## பிரதமர் நெதன்யாகு அறிவிப்பு

டெல் அவிவ்,ஜன.18

**காஸாவிலிருந்து பணயக் கைதிகளை விடுவிக்கும் இஸ்ரேல் - ஹமாஸ் ஒப்பந்தம் எட்டப்பட்டது என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்துள்ளார். இது தொடர்பில் அரசியல் - பாதுகாப்பு அமைச்சரவையை கூட்டியுள்ளதாகவும் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.**

காஸாவில் உள்ள இஸ்ரேல் பணயக் கைதிகளை விடுவிக்கும் இஸ்ரேல் - ஹமாஸ் ஒப்பந்தம் கட்டார் தலைநகர் டோஹாவில் எட்டப்பட்டுள்ளது. முன்னதாக, போர் நிறுத்தத்துக்கான மத்தியஸ்தப் பணியில் அமெரிக்கா மற்றும் கட்டார் நாடுகள் ஈடுபட்டன. இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது மூலம் 15 மாதங்களாக நீடித்து வந்த போர் முடிவுக்கு வந்துள்ளது. இந்த நிலையில் காஸாவிலிருந்து பணயக் கைதிகளை விடுவிக்கும் ஒப்பந்தம் எட்டப்பட்டதை இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு உறுதி செய்துள்ளார்.

இது தொடர்பில், பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "காஸாவில் இருந்து பணயக் கைதிகளை விடுவிக்கும் ஒப்பந்தம் எட்டப்பட்டது. பணயக் கைதிகள் திரும்புதலை உறுதி செய்தல் உள்ளிட்ட போர் இலக்குகள் அனைத்திலும் இஸ்ரேல் உறுதியாக இருக்கிறது. இந்த ஒப்பந்தம் மூலம் இடம் பெயர்ந்த பலஸ்தீனியர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப அனுமதிக்கப்படுவார்கள்" என்று தெரிவித்துள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி, இஸ்ரேலுக்குள் நுழைந்த ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டனர். 251 பேர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். இதையடுத்து, ஹமாஸ் அமைப்புக்கு எதிராக இஸ்ரேல் இராணுவ நடவடிக்கையை எடுத்தது.

இதில், காஸாவில் 46,700இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சு தெரிவித்திருந்தது. 23 இலட்சம் மக்களில் பெரும்பாலோர் இடம்பெயர்ந்துள்ளனர். காஸாவில் பரவலாக அழிவு ஏற்பட்டுள்ளது.

உணவு, எரி பொருள், மருந்து மற்றும் தங் குமிடம் ஆகியவற்றின் கடுமை யான பற்றாக்குறை காரணமாக மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். (எ)

# போப் பிரான்சிஸ் கையில் காயம்



ரோம்,ஜன.18

ஒன்றரை மாதங்களில் 2 ஆவது முறையாக போப் பிரான்சிஸ் தவறி விழுந்து காயமடைந்துள்ளார்.

போப் பிரான்சிஸ் (வயது - 88), முதுமை காரணமாக பல்வேறு உடல்நலப் பிரச்னைகளை எதிர்கொண்டு வருகிறார். இதனால், பெரும்பாலும் சக்கர நாற்காலியை பயன்படுத்தி வருகிறார். கடந்த மாதம் 7ஆம் திகதி தனது படுக்கை அறையில் தவறி விழுந்ததில் அவரது கன்னத்தில் லேசான காயம் ஏற்பட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வழக்கமான பணிகளில் ஈடுபட்டிருந்தபோது போப் பிரான்சிஸ் தவறி விழுந்தார். இதில் அவரது கையில் காயம் ஏற்பட்டது. (எ)


# இந்தியா வரவேற்பு

புதுடில்லி,ஜன.18

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு இந்தியா வரவேற்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், "காஸாவில் உள்ள பணயக் கைதிகள் விடுதலை மற்றும் போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்த அறிவிப்பை நாங்கள் வரவேற்கிறோம். இது காஸா மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் தொடர்ச்சியான மனிதாபிமான உதவிகளை வழங்க வழிவகுக்கும் என்று நம்புகிறோம். அனைத்து பணயக் கைதிகளையும் விடுவிக்கவும், போர் நிறுத்தம் மேற்கொள்ளவும், பேச்சுகள் மற்றும் இராஜதந்திர பாதைக்கு திரும்பவும் நாங்கள் தொடர்ந்து அழைப்பு விடுத்து வந்தோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# புத்தர் வடிவிலான ட்ரம்ப் சிலைகள்

## சீன சிற்பி அசத்தல்



பீஜிங்,ஜன.18

அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப்பின் உருவத்தை புத்தர் போல உரு வாக்கியுள்ளார் சீனாவைச் சேர்ந்த பீங்கான் உருவ வடிவ மைப்பாளரும் சிற்பியுமான ஹாங் ஜின்ஷி. இம்மாதம் 20 ஆம் திகதி அமெரிக்க ஜனா திபதியாக ட்ரம்ப் பதவியேற்க வுள்ள நிலை யில், புத்தர் வடிவிலான ட்ரம்ப் சிலைகள் உலக அளவில் கவனத்தை ஈர்த்துள்ளன.

இந்த சிலைகள், 140 டொலர்கள் முதல் 2,700 டொலர்கள் வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

கலை மற்றும் அரசியலை இணைக் கும் இந்த பீங்கான் சிலைகள், உலகெங்கிலும் உள்ள சிலை சேகரிப்பாளர்களிடம் அதிக ஆர்வத்தை ஈர்த்துள்ளன.

# 100 ஆண்டு கால கூட்டு ஒப்பந்தம் பிரிட்டன் பிரதமர் உக்ரைன் பயணம்



லண்டன்,ஜன.18

பிரிட்டிஷ் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் உக்ரைன் தலைநகர் கீவ்வுக்கு சென்றுள்ளார்.

அங்கு அவரும் உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கியும் "100 ஆண்டு கூட்டு" ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார்கள்.

ஒரு நூற்றாண்டு காலத்துக்கு உக்ரைனின் பாதுகாப்பை உறுதி செய்வதாக உறுதியளித்த இந்த ஒப்பந்தம் பாதுகாப்பு, அறிவியல், எரிசக்தி மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட துறைகளை உள்ளடக்கியது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பிலிருந்து உக்ரைனுக்கு 12. 8 பில்லியன் பவுண்டுகள் இராணுவ மற்றும் சிவிலியன் உதவியை வழங்குவதாக உறுதியளித்த இங்கிலாந்து உக்ரைனின் மிகப் பெரிய இராணுவ ஆதரவாளர்களில் ஒன்றாக இருந்துவருகின்றது.

பிரிட்டிஷ் மண்ணில் 50,000 இற்கும் மேற்பட்ட உக்ரைனிய துருப்புகளுக்கு பயிற்சியும் அளித்துள்ளது. உக்ரைனின் போருக்குப் பிந்தைய பொருளாதார மீட்சிக்காக ஸ்டார்மர் மேலும் 40 மில்லியன் பவுண்டுகளை அறிவிக்கவுள்ளார்.

போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான எந்தவொரு எதிர்கால பேச்சுவார்த்தைகளுக்கும் உக்ரைனை வலுவான நிலையில் வைக்கும் நோக்கத்துடன், நட்பு நாடுகள் டொனால்ட் ட்ரம்பின் பதவியேற்புக்கு முன்னர் முடிந்தவரை உக்ரைனுக்கு உதவ முன் வந்துள்ளன.

எந்தவொரு சமாதானப் பேச்சுவார்த்தையிலும், உக்ரைனுக்கு ரஷ்யாவிடமிருந்து அதன் எதிர்கால பாதுகாப்பு குறித்த உத்தரவாதங்கள் தேவைப்படும் என்று ஜெலென்ஸ்கி கூறியுள்ளார்.

பிரிட்டன் தனது 100 ஆண்டுகால உறுதிமொழி அந்த உத்தரவாதத்தின் ஒரு பகுதியாகும் என்றும், உக்ரைன் ரஷ்யாவால் மீண்டும் ஒருபோதும் பாதிக்கப்படாது என்பதை உறுதிப்படுத்த உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அதானி குழுமம்மீது குற்றச்சாட்டு ஹிண்டன்பர்க் நிறுவனம் மூடல்

வாஷிங்டன்,ஜன.18

அதானி குழுமம் மீது குற்றச்சாட்டுகளை கூறிய அமெரிக்காவின் ஹிண்டன்பர்க் நிறுவனம் மூடப்பட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த ஹிண்டன்பர்க் ஆய்வு நிறுவனம் பங்குச் சந்தை குறித்த ஆய்வை மேற்கொண்டு வந்தது. கடந்த 2023ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. அதில், அதானி குழுமம் கணக்கு வழக்கில் முறைகேடு செய்திருப்பதாகவும் பங்கு விலையை செயற்கையாக அதிகரித்திருப்பதாகவும் குற்றம்சாட்டியது. இதனால், அப்போது அதானி குழும பங்குகள் 50வீதம் வரை சரிந்தன. ஆனால், இந்த குற்றச்சாட்டை அதானி குழுமம் மறுத்தது.


இதுபோன்று, ஹிண்டன்பர்க் நிறுவனம் உலகம் முழுவதும் உள்ள பல முன்னணி நிறுவனங்களின் மீது குற்றச்சாட்டுகளை கூறி அறிக்கை வெளியிட்டுள்ளது. பங்குத் தரகு நிறுவனங்களுடன் தொடர்பு வைத்துள்ள இந்த நிறுவனம், சுயலாபத்துக்காக இதுபோன்ற செயலில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்த நிலையில், ஹிண்டன்பர்க் நிறுவனத்தின் நிறுவுநர் நாதன் ஆண்டர்சன், தனது நிறுவன இணையத்தளத்தில், "நாங்கள் மேற்கொண்டு வந்த திட்டங்கள் நிறைவடைந்துவிட்ட நிலையில், நிறுவனத்தை கலைக்க முடிவு செய்துள்ளோம்.

எங்களுடைய கடைசி திட்டத்தையும் முடித்து விட்டோம்.

இதுகுறித்து பங்குச்சந்தை பேரவையிடம் தெரிவித்துவிட்டோம். இதன்படி இன்றுதான் கடைசி நாள்"- என்று கூறியுள்ளார். (எ)

# இஸ்ரேலில் மக்கள் கொண்டாட்டம்



டெல் அவிவ்,ஜன.18

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்கப்பட்டுள்ளதை அடுத்து இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் நகரில் இஸ்ரேலிய பணயக்கைதிகளின் குடும்பத்தினர் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் ஆஷஸ் ஒருநாள் தொடர் அவுஸ்திரேலிய அணி வசமானது

மெல்பேர்ன்,ஜன.18

மகளிர் ஆஷஸ் ஒருநாள் தொடரின் மூன்றாவது போட்டியிலும் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணிகளுக்கு இடையே ஆஷஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் முதல் இரு ஒருநாள் போட்டிகளின் முடிவிலேயே அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நேற்று நடைபெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்களை இழந்து 308 ஓட்டங்கள் குவித்தது. அந்த அணியில் அதிகபட்சமாக ஆஷ்லே கார்ட்னர் 102 ஓட்டங்களும், தஹ்லியா மெக்ராத் 55 ஓட்டங்களும், பெத் மூனி 50 ஓட்டங்களும் அடித்தனர்.

இதனையடுத்து 309 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. தொடக்க வீராங்கனை மாயா பவுச்சியர் முதல் பந்தில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். அவரை தொடர்ந்து அணித் தலைவி ஹீதர் நைட் 14 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் கை கோர்த்த டாமி பியூமாண்ட் - நாட் ஸ்கைவர் பிரண்ட் அரைச்சதம் அடித்து அணியை சரிவிலிருந்து மீட்டனர்.

இருப்பினும் நாட் ஸ்கைவர் - பிரண்ட் (61 ஓட்டங்கள்), டாமி பியூமாண்ட் (54 ஓட்டங்கள்) இருவரும் ஆட்டமிழந்ததும் இங்கிலாந்து மீண்டும் சரிவை சந்தித்தது. பின்வரிசையில் டேனியல் வியாட் ஹாட்ஜ்



(35 ஓட்டங்கள்) மற்றும் ஆமி ஜோன்ஸ் (30 ஓட்டங்கள்) தவிர மற்றவர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இதனால், 42. 2 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த இங்கிலாந்து 222 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதன் மூலம் 86 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா ஒருநாள் தொடரை 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

அவுஸ்திரேலியா தரப்பில் அலனா கிங் 5 விக்கெட்களும், மெகன் ஸ்கட் 3 விக்கெட்களும் மற்றும் ஜார்ஜியா வார்ஹம் 2 விக்கெட்களும் வீழ்த்தினர். கார்ட்னர் ஆட்ட நாயகியாக தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஆஷஸ் ரி - 20 தொடர் வரும் 20ஆம் திகதி ஆரம்பிக்கிறது. (எ)


# ஜன்னிக் சினெர் அபார ஆட்டம் 3ஆவது சுற்றுக்கு முன்னேற்றம்

மெல்பேர்ன்,ஜன.18

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் உலகின் நம்பர் 01 வீரர் ஜன்னிக் சினெர் 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

"கிராண்ட்ஸ்லாம்" அந்தஸ்து கொண்ட இந்தத் தொடர் மெல்பேர்னில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியனும், "நம்பர் 01" வீரருமான ஜன்னிக் சினெர் (இத்தாலி) 2ஆவது சுற்றில் அவுஸ்திரேலியாவின் டிரிஸ்டான் ஸ்கூல் கேட்டை எதிர்கொண்டார்.

இதில் முதல் செட்டை இழந்த சினெர் அதன் பிறகு சரிவிலிருந்து மீண்டார். அதிரடியாக விளையாடி மிரட்டிய சினெர் அடுத்த 3 செட்களை தொடர்ச்சியாக கைப்பற்றி வெற்றி அசத்தினார். இந்த ஆட்டத்தில் சினெர் 4-6, 6-4, 6-1 மற்றும் 6-3 என்ற செட் கணக்கில் கைப்பற்றி 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார். (எ)



# ஆர். சி. பி. அணியில் சார்லி டீன் இணைவு



பெங்களூரு,ஜன.18

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு (ஆர்.சி.பி) மகளிர் அணியில் இங்கிலாந்து வீராங்கனை சார்லி டீன் இணைந்துள்ளார்.

ஐ.பி.எல். பாணியில் நடத்தப்படும் 3ஆவது மகளிர் பிரீமியர் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி வரும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் இந்தியாவில் நடைபெறவுள்ளது. இதற்காக வீராங்கனைகள் ஏலம் சமீபத்தில் நடைபெற்று முடிந்தது. இதன்படி றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியில், அவுஸ்திரேலியாவின் முன்னணி வீராங்கனையான சோபி மோலினக்ஸ் இடம்பிடித்திருந்தார்.

இந்த நிலையில் முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் அணியிலிருந்து விலகியுள்ளார். இதனையடுத்து சார்லி டீன் அணியில் இடம் பிடித்துள்ளார். (எ)

# இலங்கையுடன் மோதும் ஆஸி அணி அறிவிப்பு

சிட்னி, ஜன.18

இலங்கை கிரிக்கெட் அணியுடன் இரண்டு ஒருநாள் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி விளையாடவுள்ளது.

அவுஸ்திரேலிய அணி, இந்த மாத இறுதியில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. இது ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டித் தொடரில் உள்ள ஆட்டங்களாகும். இதனிடையே இந்தத் தொடரில் 2 சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும் இலங்கையுடன் அவுஸ்திரேலிய அணி விளையாடவுள்ளது. பெப்ரவரி 12, 14ஆம் திகதிகளில் இந்த ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதனை இலங்கை கிரிக்கெட் சபை உறுதி செய்துள்ளது. முதல் டெஸ்ட் போட்டி வரும் 29 ஆம் திகதியும், 2ஆவது டெஸ்ட் போட்டி பெப்ரவரி 6ஆம் திகதியும் தொடங்கவுள்ளது. (எ)

# பங்களாதேஷ் அணியின் பயிற்சியாளர் விலகல்



டாக்கா, ஜன.18

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதவியிலிருந்து நிக் போதாஸ் விலகியுள்ளார்.

அந்த அணியின் உதவி பயிற்சியாளராக தென்னாப்பிரிக்க முன்னாள் வீரர் நிக் போதாஸ் கடந்த 2023 ஆம் ஆண்டு பதவியேற்றார். இவரது பதவிக்காலம் மார்ச் 2026 வரை ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் தற்போதே பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.

அவரது சூழ்நிலையை கருத்தில் கொண்டு பங்களாதேஷ் கிரிக்கெட் சபை பதவி விலகலை ஏற்றுக்கொண்டுள்ளது. (எ)

# இந்திய அணிக்கு புதிய பயிற்சியாளர் நியமனம்

மும்பை, ஜன.18

தொடர் தோல்வி எதிரொலி காரணமாக இந்திய அணிக்கு புதிய துடுப்பாட்ட பயிற்சியாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.



இந்திய கிரிக்கெட் அணி சமீப காலங்களாக தொடர் தோல்விகளை சந்தித்து வருகிறது.இந்த நிலையில் இந்திய அணியின் புதிய துடுப்பாட்ட பயிற்சியாளராக இந்திய "ஏ" அணியின் தலைமை பயிற்சியாளர் சிதான்ஷூ கோடக் நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் 22ஆம் திகதி தொடங்கும் இங்கிலாந்துக்கு எதிரான தொடருடன் அவரது பதவிக்காலம் தொடங்குகிறது. (எ)

# அயர்லாந்துக்கு அபராதம்

டுபாய், ஜன.18

அயர்லாந்து மகளிர் கிரிக்கெட் அணிக்கு ஐ. சி. சி. அபராதம் விதித்துள்ளது.

அயர்லாந்து மகளிர் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. இந்தத் தொடரில் 3-0 என்ற கணக்கில் இந்தியா வெற்றி பெற்றது.

இந்தத் தொடரின் 3ஆவது போட்டி கடந்த 15ஆம் திகதி ராஜ்கோட்டில் நடைபெற்றது. இதில் இந்தியா 304 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் அயர்லாந்து அணி குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்துவீசி முடிக்காதது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் அயர்லாந்து அணியில் உள்ள ஒவ்வொரு வீராங்கனைக்கும் போட்டி கட்டணத்தில் இருந்து தலா 10 சதவீதம் அபராதம் விதித்தது ஐ. சி. சி. உத்தரவிட்டுள்ளது. (எ)

# இந்தியாவின் சிந்து காலிறுதிக்கு தகுதி



புதுடில்லி, ஜன.18

இந்திய ஓபன் பட்மிண்டன் தொடரில் பி. வி. சிந்து காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

இந்தத் தொடர் டில்லியில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் இந்திய வீராங்கனை பி. வி. சிந்து , ஜப்பானின் மனாமி சுய்ஷூவுடன் மோதினார். இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய சிந்து 21 - 15, 21 - 13 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

இவர் காலிறுதியில் இந்தோனேசியாவின் கிரேகோரியா மரிஸ்கா துன்ஜூங்குடன் மோதவுள்ளார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டாபய...

திணைக்களத்தில் ஆஜராகினார்.
இதன்போது, சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் அவர் வாக்குமூலம் வழங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தேசிய...

அரச அதிபர் உள்ளிட்ட பிரதிநிதிகள் வரவேற்றனர்.
தேசிய தைப்பொங்கல் நிகழ்வுகள் இம்முறை யாழ்ப்பாணம் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் நடைபெற்று கலை நிகழ்வுகள் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
குறித்த தேசிய தைப்பொங்கல் நிகழ்வு புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி தலைமையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

## ரணில்...

செயற்படுத்தப்படுகின்றன. அதனையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். இருப்பினும் இந்த நாட்டு மக்களை ஏமாற்றி உள்ளனர். நாட்டு மக்கள் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி அநுரகுமாரவை ஆட்சிக்கு கொண்டுவரவில்லை. மாற்றத்தை எதிர்பார்த்தே அநுரகுமாரவை ஆட்சிக்கு கொண்டு வந்தனர். ஆனால் எந்தவித மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை.
நாணய நிதிய விடயத்திலும் எந்தவித மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை. நாணய நிதிய உடன்படிக்கையை நிராகரிப்போம், வரியை குறைப்போம் என்றெல்லாம் கூறினர். ஆனால் அந்த விடயங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்பட்டதாக தெரியவில்லை. அதனை நம்பி மக்கள் அவர்களுக்கு வாக்களித்தனர். அதேபோன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் வழங்கினர். ஆயினும் தற்போது எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை - என்றார். (அ)

## யாழ்.பல்கலை...


பொங்குதமிழ்ப் பிரகடன பொதுநினைவுத் தூபி முன்பாக இடம்பெற்ற பொங்கு தமிழ் பிரகடன உரையை தொடர்ந்து பொங்குதமிழ் தூபிக்கு மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.
இதில் மாணவர்கள், யாழ்.பல்கலைக் கழக ஊழியர்கள் கலந்துகொண்டனர்.
17-1-2001 அன்று தமிழ் மக்களின் அபிலாஷைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித்தாயகம், தமிழ்த்தேசியம் என்பன அங்கீகரிக்கப்படவேண்டும் என பொங்குதமிழ் பிரகடனம் பிரகடனம் செய்யப்பட்டது. (அ-05)

## மின்சாரக்...

எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு தற்போதைய மின் கட்டணத்தை அவ்வாறாகவே பேணுமாறான யோசனையே முன்வைக்கப்பட்டிருந்தது.
மின் கட்டணத்தை நூற்றுக்கு 11 வீதம்வரை குறைக்கும் பரிந்துரையை முன்வைத்திருந்தோம். இருப்பினும் முதல் ஆறு மாதங்களுக்கு இவ்வருடத்தில் மின் கட்டணத்தை அவ்வாறாகவே பேணவேண்டும் என்ற யோசனையே மின்சார சபையினால் முன்வைக்கப்பட்டது.
இத்தகைய பின்னணியில் டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதியிலிருந்து மக்கள் கருத்தை பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அதற்கமைய இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
அந்த தீர்மானத்துக்கு அமைய நேற்று நள்ளிரவு முதல் அனைத்து பிரிவுகளுக்குமான மின் கட்டணத்தை 20 வீதத்தால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

# வடக்கு பொங்கல் விழா மாதகலில்!





யாழ்ப்பாணம், ஜன. 18
பண்பாடுகளும் பழக்க வழக்கங்களும் மாறிவரும் சூழலில், பாரம்பரிய பொங்கல் நிகழ்வுகள் தேவையானதே என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில், வடக்கு மாகாண பொங்கல் விழா, யாழ்ப்பாணம் மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவிலில் நேற்று இடம்பெற்றது.
வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பங்கேற்றார்.
சிறப்பு விருந்தினராக, வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவனும், கௌரவ விருந்தினராக, சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகனும் பங்கேற்றனர்.
ஆலய வழிபாட்டில் ஈடுபட்ட விருந்தினர்கள், பாரம்பரிய முறைப்படி அழைத்துச் செல்லப்பட்டு, சடங்காசார முறைப்படி, புதிரெடுத்தல் நிகழ்வு இடம்பெற்றது.
தொடர்ந்து, புதிரை ஆலயத்திற்கு எடுத்துச் சென்று, உரலில் இட்டு அரிசியாக்கி, பொங்கல் பொங்கப்பட்டது. சிறப்பாக, 51 பானைகளில் பொங்கல்கள் பொங்கப்பட்டன.
அதன் பின்னர், மேடை நிகழ்வுகள் நடத்தப்பட்டன.
மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட இசைக் கருவிகள், கலை மன்றங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.
அத்துடன் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன.
இங்கு உரையாற்றிய ஆளுநர், இன்றைய இளையோருக்கு, விவசாயத்தின் மீதான நாட்டம் குறைந்து வருவதாகவும், விவசாயத்தை, அதிக வருமானம் தரக்கூடிய துறையாக மாற்ற வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (அ)

## ஈழத்தமிழர்கள்...

உள்ளிட்ட குழுவினருக்கும், பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று கொழும்பில் நடைபெற்றது.
இதன்போது, கடந்த ஜனாதிபதித் தேர்தல் குறித்த கருத்துப் பகிர்வுகள் இடம்பெற்ற சமநேரத்தில், ஈழத்தமிழர்களின் அரசியல் உரித்துக் கோரும் பயணத்தின் அடுத்த கட்ட நகர்வுகள் தொடர்பிலும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் குறித்தும் கோரப்பட்ட போது, உள்ளக சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைந்த வடக்கு - கிழக்குக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வு என்பதுதான் சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசும் சேர்ந்து ஒஸ்லோவில் இணங்கிக் கொண்ட இறுதி விடயம் என்ற அடிப்படையில் 13வது திருத்தச் சட்டத்துக்கும் சமஸ்டி முறைமைக்கும் இடையிலான நடைமுறை வேறுபாடுகள், 13வது திருத்தச் சட்டத்தை புறந்தள்ளி சமஸ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்க வேண்டியதன் நியாயப்பாடுகள், கனடா, சுவிஸ், பெல்ஜியம் போன்ற நாடுகளில் பின்பற்றப்படும் சமஷ்டி முறைமையையும், இந்திய மாநில சுயாட்சி முறைமையையும் அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் சமஷ்டியை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ள யதார்த்தப் புறநிலைகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், ஐரோப்பிய ஒன்றியத்தினரிடம் வலியுறுத்தியிருந்தார்.
இதன்போது தமது குழுவினால் தயாரிக்கப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு அறிக்கையின் பிரதி ஒன்றை, தமிழர் பிரதிநிதிகள் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனிடம் குழுவின் தலைமை கண்காணிப்பாளர் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டன் தூதுவருடன் மனோ கணேசன் பேச்சு

கொழும்பு, ஜன. 18
பிரித்தானிய தூதுவர் ஆண்ட்ரூ பற்றிக் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு கொழும்பில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் இல்லத்தில் இடம்பெற்றது.
இதன் போது, இலங்கையின் சமூக-பொருளாதார தேசத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டில், பிரித்தானியாவின் வகிபாகம் குறித்து, கவனம் செலுத்தப்பட்டது.
அத்துடன், மலையக மக்கள் எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்கள், பெருந்தோட்ட மக்களின் உரிமைகள் மற்றும் நிர்வாக கட்டமைப்பில் உள்ள குறைப்பாடுகள் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.
நில உரிமைகள், தேசிய நீரோட்டத்தில் ஒருங்கிணைப்பு மற்றும் அதிகாரப் பகிர்வு குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.
இந்த சந்திப்பில், ஜனநாயக மக்கள் முன்னணியின் சர்வதேச விவகார மற்றும் தொடர்பாடல் உப தலைவர் பாரத் அருள்சாமியும் இணைந்து கொண்டார். (அ)

## சிறையில்...

நாமல் கூறியவை வருமாறு-
தேர்தல் காலங்களில் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை தற்போது அரசாங்கம் நிறைவேற்றவில்லை. அதற்கு மாறாகவே செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அரச சேவை பலப்படுத்தப்படும் என்றார்கள். ஆனால் தற்போது பலவீனப்படுத்தப்பட்டுவருகின்றது.
அத்துடன், அரசியல் பழிவாங்கல்களும் ஆரம்பமாகியுள்ளன. எனவே, அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்படும் தொழிற்சங்க தலைவர்கள் உட்பட அனைவருக்கும் சட்ட உதவிகள் வழங்கப்படும்.
போலிக்குற்றச்சாட்டுக்களை சுமத்தி எம்மை சிறையில் அடைத்து எமது பயணத்தைத் தடுக்க முடியாது - என்றார். (அ)

## சீனப்...

அத்தநாயக்க கூறியவை வருமாறு-
ஜனாதிபதிக்கு சீனாவில் சிறப்பான வரவேற்பு கிடைக்கப்பெற்றுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. இதற்கு முன்னரும் எமது நாட்டு ஜனாதிபதிகளுக்கு இவ்வாறு வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.
வரவேற்பென்பது முக்கிய விடயம் அல்ல. அதன்பின்னணியில் உள்ள பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நிகழ்ச்சி நிரல்கள்தான் முக்கியம். அவை தொடர்பில் அறிய வேண்டும்.
15 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது. இவை என்ன? இதனை எப்படி அறிவது? மேற்படி ஒப்பந்தங்கள் தொடர்பில் பாராளுமன்றம் மற்றும் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் - என்றார். (அ)

## பொறுப்புக்...

வேளை இலங்கையின் அரசியல் பாதை மாறியது.
திஸாநாயக்க அதிகளவு சமத்துவமான பொருளாதார கொள்கைகளை முன்வைத்தார், ஊழலுக்கு எதிராக போராடுவது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிப்பது உட்பட நீண்டகால மனித உரிமை கரிசனைகளுக்கு தீர்வு காண்பதாக உறுதியளித்தார்.
எனினும் முன்னைய இலங்கை அரசாங்கங்கள் போல 1983 முதல் 2009 வரையான காலப்பகுதியில் உள்நாட்டு யுத்தத்தின்போது இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புகூறப்படவேண்டும் என்பதை அவர் ஆதரிக்கவில்லை.
திஸாநாயக்க அதிகளவு சமத்துவமான பொருளாதாரக் கொள்கைகளை முன்வைத்தார். ஊழலுக்கு எதிராக போராடுவது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிப்பது உட்பட நீண்டகால மனித உரிமை கரிசனைகளுக்கு தீர்வு காண்பதாக உறுதியளித்தார்.
எனினும் முன்னைய இலங்கை அரசாங்கங்கள் போல 1983 முதல் 2009 வரையான காலப்பகுதியில் உள்நாட்டு யுத்தத்தின்போது இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறப்படவேண்டும் என்பதை அவர் ஆதரிக்கவில்லை - என்று கூறியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# யாழ். கஸ்தூரியார் வீதி நகைக் கடைக்குள் புகுந்து 30 இலட்சம் ரூபாவை பறித்த கும்பல்

## புலனாய்வுப் பிரிவினர் என கூறி கைவரிசை

யாழ்ப்பாணம், ஜன. 18

**யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைக் கடையொன் றுக்குச் நேற்றுமுன்தினம் மதியம் சென்ற குழுவொன்று 30 இலட் சம் ரூபா பணத்தைப் பறித்துச் சென்ற சம்பவம் பதிவாகியுள்ளது.**

பொலிஸ் புலனாய்வுப் பிரிவு எனத் தெரிவித்து நகைக் கடைக்குள் நுழைந்த மூவரடங்கிய குழு, சோதனை நடத்தப்போவதாக தெரி வித்து கடையில் இருந்தவர்களுடன் அச்சுறுத்தும் வகையில் செயற்பட் டனர். பின்னர் பணத்தை பறித்துச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட நகைக் கடை உரி மையாளர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

கண்காணிப்பு கமராக்களின் உத வியுடன் சம்பவம் தொடர்பாக யாழ்ப் பாணம் பொலிஸார் விசார ணை களை முன்னெடுத்துள்ளனர். (அ)

# கடந்த 16 நாட்களில் மட்டும் துப்பாக்கிச்சூட்டில் ஐவர் பலி!

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன. 18

இந்த ஆண்டின் கடந்த 16 நாட்களில் மாத்திரம் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 5 பேர் உயிரிழந்துள்ளதுடன் நான்கு பேர் காயமடைந் துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக மக்கள் தமது அன்றாட நடவ டிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்வதில் நிச்சயமற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் அறிக்கை ஊடாக தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தரவுகளுக்கு அமைய, வெளிநாடு சென் றுள்ளவர்களில் 188 பேருக்கு சர்வதேச சிவப்பு எச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் இவர்களில் 63 பேர் வெளிநாடுகளில் இருந்து கொண்டு பாதாள உலக குழு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த பாதாள உலக செயற்பாடுகளை உடனடியாக ஒழிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (அ)

# சீனச் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைக்கும் அநுர!

பீஜிங், ஜன. 18

சீன சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை ஒரு சிறந்த தளம் என்று கூறிய ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க, சிறந்த விருந்தோம்பலுடன் கூடிய இலங்கைக்கு வருகை தரு மாறு சிச்சுவான் மாகாண மக்க ளுக்கு அழைப்பு விடுத்தார்.

சீனாவுக்கு நான்கு நாள் உத்தி யோகபூர்வ விஜயம் மேற்கொண் டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் சிச்சுவான் மாகாண சீன கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் வேங் சியூஹூய்க்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை நடைபெற்றது.

வரலாற்று மற்றும் கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாத்து, அபிவிருத்தியின் விடியலைக் கண்டுள்ள சிச்சுவான் மாகாணத் தின் செங்டு நகரம், சீனாவில் மகிழ்ச்சியான மக்களைக் கொண்ட நகரங்களில் ஒன்றாக முன்னணி இடத்தைப் பிடித்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தியில் முன்னணியில் இருக்கும் சிச்சுவான் மாகாணத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதாரம்,



வர்த்தகம், கலாசாரம், சுற்றுலாத் துறை மட்டுமன்றி அரசுகளுக்கிடை யிலான உறவுகளை வலுப்படுத்து வது மற்றும் அவற்றை புதிய நிலைக்கு உயர்த்துவது குறித்து இந்த சந்திப்பில் விரிவாக ஆரா யப்பட்டது.

எரிசக்தி உட்பட பல துறை களில் சிச்சுவான் மாகாணம் அடைந் துள்ள சாதனைகளை இலங்கையு டன் பகிர்ந்து கொள்ளுமாறு மாகாண செயலாளருக்கு ஜனாதி பதி அழைப்பு விடுத்தார்.

இலங்கை தற்போது பொருளா தார ரீதியாக ஸ்திரமடைந்து வருவ தாகவும், வெளிப்படையான ஆட்சி யின் கீழ் முதலீட்டுக்கு மிகவும் சாத கமான சூழல் தற்போது நாட் டில் இருப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

இலங்கை தற்போது அரசி யலில் ஒரு திருப்புமுனையில் இருப் பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுர குமார திஸாந ாயக்க, வடக்கு, கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு மக்கள் ஒன்றி ணைந்து மூன் றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கி தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவந்துள்ளதாகவும் அந்த ஆணையின் ஊடாக மக்கள் தங்கள் மீது வைத்திருக்கும் எதிர்பார்ப்பு களை முழுமையாக நிறைவேற்ற அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சீன சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை ஒரு சிறந்த தளம் என்று கூறிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, சிறந்த விருந்தோம்பலு டன் கூடிய இலங்கைக்கு வருகை தருமாறு சிச்சுவான் மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்கு வரத்து, நெடுஞ்சாலைகள், துறை முகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர் பிமல் ரத் நாயக்க ஆகியோரும் இந்த சந்திப் பில் கலந்து கொண்டனர். (அ)

# உதயங்கவுக்கு பிணை!

கொழும்பு, ஜன. 18

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நுகேகொடை நீதவானின் உத்தரவுக்கு அமைவாக அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதன்படி, 10,000 ரூபா ரொக்கப் பிணை மற்றும் 2 சரீரப் பிணையில் உதயங்க வீரதுங்க விடுவிக்கப்பட் டார்.

அயல் வீட்டாரை தாக்கிய சம்பவம் தொடர்பில் மீரிஹான பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் பிரகாரம், கடந்த 10 ஆம் திகதி அவர் கைது செய்யப் பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்க மறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வழங்கிய வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றவேண்டும்

## ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஜன. 18

தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி களை நிறைவேற்ற வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொது செயலாளர் தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக முன் னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் பெறுமதியை நாடு தற் போது உணர்ந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இப்போது நாட்டில் 300 ரூபா வுக்கு கூட அரிசி தேடித் கொள்ள முடியாமல் உள்ளது. ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் இருக்கும் போது அவர் பொறுப்பேற்ற விடயங்களை சரிவர நிறைவேற்றி இருந்தார்.

மக்களுக்கு அரிசியை பகிர்ந்து கொடுத்து பிரச்னையா? நாம் பொறாமை கொள்ளவில்லை. எரி பொருள், எரிவாயு போன்றவற்றின் விலையை குறைக்கக் கூறவில்லை. சம்பள அதிகரிப்பு தொடர்பாக நாம் ஒன்றும் சொல்லப் போவ தில்லை. ஒன்றே ஒன்றை மட்டும் நாம் கூறிக்கொள்கின்றோம், அதா வது நீங்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுங்கள். ஐக்கிய தேசிய கட்சியில் காணப்படும் பிரச்னைகளை நாம் தீர்த்துக் கொள்கின்றோம் - என்றார். (அ)

# தொடர் வேலை நிறுத்தத்துக்கு தயாராகும் தபால் ஊழியர்கள்!

## அநுர அரசுக்கு காலஅவகாசம்

கொழும்பு, ஜன. 18

தபால் ஊழியர்களின் தொழில் பிரச்னைகளை தீர்ப்பதில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தாவிடின் போராட்டங்களில் ஈடுபட நேரிடும் என ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி எச்சரித்துள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதிக்கு பின்னரும் தமது பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வு கிடைக்காவிடின் முன்ன றிவிப்பின்றி தொழில் ரீதியாக நடவடிக்கை எடுக்க நேரிடும் என முன்னணியின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

தபால் ஊழியர்களின் சம்பளப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு மக்கள் விடுதலை முன்னணியின் தபால் தொழிற்சங்கப் பிரதிநிதிகளே ஆரம்ப முன்னோடிகளாக திகழ்வதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்ன ணியின் இணை அழைப்பாளர் சிந்தக பண்டார தெரி வித்தார்.

இதன் காரணமாக தற்போதைய அரசாங்கத்துக்கு முன்னர் சம்பளம் தொடர்பாக வழங்கப்பட்ட முன் மொழிவுகள் இவ்வருட வரவு - செலவுத் திட்டத்தில் அமுல்படுத்தப்படும் என நம்புவதாகவும் அவர் கூறினார்.

கடந்த 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் தபால் திணைக்கள ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப் படவில்லை எனவும், அந்த வருடத்தின் பின்னர் சம்ப ளத்துடன் கொடுப்பனவுகள் இணைக்கப்பட்ட போதி லும் தபால் ஊழியர்கள் ஓய்வுபெறும் போது கொடுப் பனவுகள் கிடைக்கப்பெறுவதில்லை எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# ஜனாதிபதி செயலக வாகனங்கள் மாயமானமை குறித்து விசாரணை

கொழும்பு, ஜன. 18

ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான 29 வாகனங்கள் காணாமல்போனமை தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக குற்றப் புலனாய்வுத் திணைக் களம் கோட்டை நீதவான் நீதிமன் றில் பி அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்திற்குச் சொந்தமான 29 வாகனங்கள் காணாமல்போனமை தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பில் விசாரணை நடத்தவுள் ளதாக குற்றப் புலனாய்வு திணைக் களம் பிரேரணை ஒன்றை சமர்ப் பித்து இதனை தெரிவித்திருந்தது.

சம்பவம் தொடர்பில் மேலதிக செயலாளரிடம் ஏற்கனவே வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள் ளதாகவும், குறித்த 29 வாகனங்க ளில் 16 வாகனங்கள் கடைசியாக பயன்படுத்திய நபர்களின் விவரங் கள் தம்மிடம் உள்ளதாகவும், அவற்றில் 13 வாகனங்கள் தொடர் பில் எவ்வித தகவலும் இல்லை எனவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. .

இந்த வாகனங்கள் தொடர்பான கடிதப் பரிவர்த்தனைகள் தொடர் பான தகவல்களை 09 மாகாணங் களிலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களிடம் கேட்டுள்ள தாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்தது.

இதன்படி, விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப் புல னாய்வுப் பிரிவினருக்கு உத்தர விட்ட கோட்டை நீதவான் நிலுப் புலி லங்காபுர, விசாரணைகள் தொடர்பான முன்னேற்றங்களை அறிவிப்பதற்காக வழக்கை மார்ச் 12ஆம் திகதிக்கு அழைக்குமாறும் உத்தரவிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org